Registered as a News Paper in Sri Lanka

# தினக்கதிர்

தினசரி

THINAKKATHIR DAILY

தினக்கதிர்

ஒளி - 02 - கதிர் - 44 02.06.2001 சனிக்கிழமை பக்கங்கள் - 08 விலை ரூபா 5/-

சகல விதமான அச்சு வேலைகளுக்கும் நீங்கள் நாட வேண்டிய இடம்

ஈஸ்ரன் கிராபிக்ஸ்

திருமலை வீதி, மட்டக்களப்பு.

## மூன்று ஆண்டுகளுக்கு மேலாக தொடரும் வழக்குகள் தள்ளுபடி

### மன்னார் நீதிபதி அஜ்மீர் தெரிவிப்பு

(மன்னார் நிருபர்)

மூன்று ஆண்டுகளுக்கு மேலாக நீடித்துவரும் சுமார் 200 வழக்குகளைத் தான் தள்ளுபடி செய்யப்போவதாக, மன்னார் மாவட்ட நீதிபதி எம்.எச்.எம்.அஜ்மீர் பொலிஸ் விஷேட புலனாய்வுப் பிரிவினருக்கு அறிவித்துள்ளார்.

இவ் வழக்குகள் சம்பந்தமான கோவைகள் மேல் நடவடிக்கை எடுப்பதற்காக சட்டமா அதிபருக்கு அனுப்பி வைக்கப் பட்டுள்ளதாக நீதிமன்றத்தில் தெரிவிக்கும், பொலிஸ் அதிகாரிகள் வழக்குகளை ஒத்தி வைப்பதற்கான அனுமதியையும் நீதிமன்றத்தில் கோரி வருகின்றனர்.

இவ்வாறு சட்டமா அதிபருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள வழக்குகளின் பதிவு இலக்கங்களை நீதிமன்றத்தில் சமர்ப்பிக்குமாறு நீதிபதி உத்தரவிட்டுள்ளதுடன் பதிவு இலக்கங்கள் சமர்ப்பிக்கப்படாத வழக்குகள் நீதிமன்றத்தினால் தள்ளுபடி செய்யப்படும் எனவும் அது தொடர்பாக கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப் பட்டுள்ளவர்கள் விடுதலை செய்யப்படுவார்கள் எனவும் தெரிவித்தார்.

இதேவேளை, சிறப்பு

(8ம் பக்கம் பார்க்க)

# கோமரங்கடவலயில் — விடுதலைப்புலிகள் தாக்குதல்

## ஏழு படையினர், இரு சிவிலியன்கள் பலி

(நமது மூதூர் நிருபர்)

**திருகோணமலை கோமரங்கடவலப்பகுதியில் நேற்றுக்காலை படையினர் மீது விடுதலைப்புலிகள் மேற்கொண்ட தாக்குதலில் ஏழு படையினர் பலியாகியுள்ளனர். சம்பவத்தில் சிக்கி இரு பொதுமக்கள் உயிரிழந்துள்ளனர். அத்தோடு படையினரது ஆயுதங்களும் விடுதலைப்புலிகளால் எடுத்துச் செல்லப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.**

கோமரங்கடவலப் பகுதியில் இராணுவத்தினரும். பொலிசாரும் இணைந்து வீதி ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த சமயம் நேற்றுக் காலை 8.45 மணியளவில் விடுதலைப் புலிகள் மறைந்திருந்து தாக்குதல் நடத்தியுள்ளனர்.

இத்தாக்குதலின் போது இரண்டு பொலிசார், ஊர்காவல் படையைச் சேர்ந்தவர்கள் இருவர் மற்றும் ஒரு இராணுவச் சிப்பாயும் உயிரிழந்துள்ளனர்.

சம்பவம் நடைபெற்ற வேளை இடையில் சிக்கி இரு பொதுமக்கள் பலியாகியுள்ளனர்.

இவர்கள் சிங்கள இனத்தைச் சேர்ந்தவர்கள் என அடையாளம் காணப்பட்டுள்ளது.

சம்பவத்தைத் தொடர்ந்து தாக்குதல் நடத்திய விடுதலைப் புலிகள் உயிரிழந்த படையினரின் ஆயுதங்களையும் எடுத்துக் கொண்டு அவ்விடத்திலிருந்து சென்

(8ம் பக்கம் பார்க்க)

### பட்டதாரிகள் விபரம் ஒப்படைப்பு

(தவம்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் வேலையற்று இருக்கும் பட்டதாரிகளின் பெயர் விபரங்கள் மட்டக்களப்பு ஈ.பி.டி.பி. காரியாலயத்தில் மட்டக்களப்பு மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் ஒன்றியத்தினால் ஒப்படைக்கப் பட்டுள்ளது.

தமக்கு வேலைவாய்ப்பு வழங்கக் கோரி பட்டதாரிகள்

(8ம் பக்கம் பார்க்க)

உடனடி வேலைவாய்ப்பு

1. முஸ்லிம், முஸ்லிம் அல்லாத வீட்டுப் பணிப்பெண்களுக்கு முற்றிலும் இலவசமாக சவூதி அரேபியாவுக்கு அனுப்பி வைக்கப்படும். வயதெல்லை 25 தொடக்கம் 40 வரை (குவைத், பஹ்ரைன், ஜோர்தான், டோகா கட்டார் போன்ற நாடுகளுக்கும் அனுப்பப்படும்)

1. டோகா கட்டார் இலும் உடனடி வேலைவாய்ப்பு (ஆண்களுக்கு)

* ALUMINIUM FABRICATORS,
* ALUMINIUM INSTALLER,
* ALUMINIUM FABRICATORS,
* ALUMINIUM FITTER.
* TILE PIXER,
* MASON,
* CARPENTER,
* PAINTER,
* ELECTRICIAN,
* ELECTRONIC TECHNICIAN

உடனடிப் பயணம்

போன்ற வேலைவாய்ப்புகளும் உண்டு சான்றிதழ்களுடன் நேரடியாக வரவும்.

நியூ பாஹிம் என்டப்பிரைஸஸ்

LL No -736

283/1 பிரதான வீதி, கொழும்பு.

விசாரணைகளுக்கு:

இல:15/1, 15/2, பிரதான வீதி, காத்தான்குடி -02

065-47090 ADVT.

### சேருநுவரயில் ஆர்.பி.ஜி.தாக்குதலில் இரண்டு சிப்பாய் காயம்

(மூதூர் நிருபர்)

மூதூர்சேருநுவரப் பகுதியில் நேற்றுக் காலை படையினர்மீது விடுதலைப்புலிகள் மேற்கொண்ட ஆர்.பி.ஜி தாக்குதலில்இரு படையினர் காயமடைந்துள்ளனர்.

காயமடைந்த படையினரில் ஒருவர்அனுராதபுர வைத்திய சாலையிலும் மற்றவர் கந்தளாய் வைத்தியசாலையிலும் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

### வயதெல்லையை அதிகரிக்குமாறு கலாசார உத்தியோகத்தர் சங்கம் வேண்டுகோள்

(தவம்)

இலங்கை நிர்வாக சேவைக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சைக்கான பரீட்சார்த்திகளின் வயதெல்லையை அதிகரிக்குமாறு வடக்கு கிழக்கு கலாசார உத்தியோகத்தர் சங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

ஆகஸ்ட் மாதத்தில் நடாத்தத் திட்டமிடப்பட்டுள்ள இப் பரீட்சைக்கு 30 வயதுக்கு உட்பட்ட பட்டதாரிகள் மாத்திரம் விண்ணப்

(8ம் பக்கம் பார்க்க)

### மட்டக்களப்பு கல்லடித்தெரு சுற்றி வளைத்து தேடுதல்

(வேதாந்தி)

மட்டக்களப்பு - கல்லடித் தெரு பகுதி நேற்று அதிகாலை இராணுவத்தினரால் சுற்றிவளைக் கப்பட்டு தேடுதல் மேற்கொள்ளப்பட்டது. வீடு வீடாகச் சென்ற இராணுவத்தினர் 15 -60 வயதுக்குட்பட்டோரை ஆனைப்பந்தி ஆலய முன்றலுக்கு அழைத்து அடையாள அட்டைகளைப் பரிசோதனை செய்தனர்.

அத்துடன் இராணுவப் புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்தோர் பொது மக்கள் மத்தியில் விடுதலைப்புலிகளுடன் எந்தவொரு தொடர்பும். உதவியும் செய்யக் கூடாது எனக் கேட்டுக் கொண்டுள்ளனர்.

காலை 10 மணிவரை நடைபெற்ற இச்சுற்றிவளைப்பின் போர் பொதுமக்கள் எவரும் கைது செய்யப்படவில்லை எனத் தெரிவிக் கப்படுகிறது.

இதேவேளை சந்திவெளி, கும்புறுமூலை போன்ற இடங்களில் இராணுவத்தினர் பலத்த சோதனைகளை மேற்கொண்டுள்ளனர்.

### மட்டு மாவட்டத்தில் இன்று பாடசாலை

(தவம்)

கடந்த வாரம் வெள்ளிக் கிழமை (25/5/01) மட்டக்களப்பில் நடைபெற்ற இலங்கைத்தமிழர் ஆசிரியர் சங்க எழுச்சி விழாவுக்காக விடுமுறை வழங்கிய பாடசாலைகள் இன்று சனிக்கிழமை நடைபெறும்.

25ம் திகதி மட்டக்களப்பு,

(8ம் பக்கம் பார்க்க)

### பிரதியமைச்சர் அதாவுல்லாவின் கூட்டத்தில் குண்டுடன் வாலிபர் கைது

(அட்டாளைச்சேனை பிரதேச நிருபர்)

திகாமடுல்ல மாவட்டப் பாராமன்ற உறுப்பினரும், பிரதிக் கல்வியமைச்சருமான ஏ.எல்.எம். அதாவுல்லா பிரதமஅதிதியாகக் கலந்து கொண்ட கூட்டத்தில் கைக் குண்டுடன் வாலிபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சம்மாந்துறை அல் மர்ஜான் பாலிகா மகா வித்தியாலயத்தில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்ற மாவட்ட விளையாட்டு விழாவுக்கும், சம்மாந்துறை வலய கல்வி அதிகாரிகளினால் நடாத்தப்பட்ட பாராட்டு விழாவுக்கும் செல்லும்போதே அமைச்சர் செல்லும் பாதையில் அல்-மர்ஜான் வித்தியாலயத்திற்கு முன்பாக சந்தேகத்துக் கிடமான முறையில் நடமாடிய வாலிபரை சம்மாந்துறை பொலிசாரும், விஷேட அதிரடிப் படையினரும் இணைந்து கைது செய்து

(8ம் பக்கம் பார்க்க)

### பட்டப்பகலில் வர்த்தகர் வீட்டில் 70லட்சம் கொள்ளை

(கொழும்பு)

நகைகள், இரத்தினக்கற்கள், ரொக்கப் பணம் என மொத்தம் எழுபது லட்சம் ரூபாய் பெறுமதியான பொருட்களை ஒரு வர்த்தகரின் வீட்டுக்குள் பட்டப்பகலில் நுழைந்த ஆயுதம் தரித்த கோஷ்டி கொள்ளையடித்துச் சென்றுள்ளது.

களனியில் பொல்லேகல என்ற இடத்திலுள்ள 65 வயதான வர்த்தகரின் வீட்டுக்குள் கைத்துப்பாக்கி, கை எறிகுண்டு முதலிய ஆயுதங்களுடன் நுழைந்த ஒரு

(8ம் பக்கம் பார்க்க)

**95 சதவீதமான சிங்கள மக்கள் தடையை நீக்கி புலிகளுடன் பேசுவதை விரும்புகின்றனர்.**

*– சர்வமத சமாதான மன்றத் தலைவர் –*



அப்ப அஞ்சி வீதமான இனவாதிகள் சொல்லுற சொல்லுக்குத் தான் இஞ்ச மதிப்பு இருக்கு.........

## தமிழ் பேசும் மக்களின் குரலாக ஒலிக்கிறது தினக்கதிர்

# தினக்கதிர்

த.பெ. இல: 06
155.திருமலை வீதி,
மட்டக்களப்பு,
தொ.பே.065.22554

E-mail :- tkathir@snet.lk


## தந்தை காட்டிய வழி இருக்கிறதே!

சமாதானத்திற்கான கதவுகள் திறக்கப்பட்டுள்ள இச் சந்தர்ப்பத்தில் புலிகள் பிடிவாதமான தமது போக்கைக் கைவிட்டு தமிழ் மக்களின் நலனில் அக்கறை கொண்டு நிபந்தனைகளற்ற பேச்சுவார்த்தைக்கு வரவேண்டுமென்று தகவல் தொடர்பு சாதன அமைச்சர் பிரியதர்ஷன யாப்பா ஒரு அறிக்கையில் கூறியிருக்கிறார்.

விடுதலைப் புலிகள் மட்டும் தான் பிடிவாதமாக இருக்கின்றனரா; அரசாங்கம் பிடிவாதமாக இருக்கவில்லையா என்ற கேள்வி கேட்டு காலத்தை வீணாக்க வேண்டியதில்லை.

சமாதானப் பேச்சுவார்த்தைக்கான வழியைத் திறப்பதற்காக கருத்துப் பரிமாறும் போது பல்வேறு தடைகளும் ஏற்படுவது இயல்பு தான் என்றும் அமைச்சர் யாப்பா தமது அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிறார்.

பேச்சுவார்த்தைக்கான முன் நிபந்தனையாக தடை நீக்கத்தை மேற்கொள்ளுமாறு புலிகள் கேட்கும் அதேவேளை இத்தகைய முன் நிபந்தனையை ஏற்றுக்கொள்ள முடியாதென அரசு அறிவித்திருக்கிறது. பேச்சுவார்த்தை ஆரம்பித்தபின் அதன் முன்னேற்றத்தைப் பொறுத்தே தடை நீக்கம் பற்றிப் பரிசீலனை செய்யலாமென்று அரசு குறிப்பிட்டிருக்கிறதென்று அமைச்சர் யாப்பா தனது அறிக்கையில் கூறியிருக்கிறார்.

தமிழ் மக்களின் நலனில் அக்கறை கொண்டு தடை நீக்கத்தை விட்டுக் கொடுக்க வேண்டும் என்று கேட்கும் அமைச்சர் யாப்பா தமிழர் நலனில் அரசுக்கு அக்கறை இருக்க வேண்டிய அவசியமில்லையென்று கருதுகிறாரோ?

இப்பொழுது விடுதலைப் புலிகள் மீது விதிக்கப்பட்டுள்ள தடையை நீக்கிவிட்டு இருதரப்பும் இனப்பிரச்சினைக்கு சமாதானமாக அரசியல் தீர்வொன்றைக் காண்பதற்கு பேச்சுவார்த்தை நடத்துவதற்கு இருதரப்புக்கும் இடையில் கௌரவப் பிரச்சினையே முக்கிய தடையாகத் தோன்றுகிறது.

இருதரப்பும் தங்கள் கௌரவத்துக்குப் பங்கம் ஏற்படாமல் பேச்சுவார்த்தையைத் தொடங்குவதற்கு வழியில்லையா?

ஜனாதிபதி சந்திரிகா பண்டார நாயகாவின் தந்தையார் எஸ்.டபிள்யூ. ஆர்.டி.பண்டாரநாயகா இதற்கு, முன்பே வழி காட்டியிருக்கிறார்.

எஸ்.டபிள்யூ.ஆர்.டி.பண்டார நாயகா 1956ம் ஆண்டில் பிரதமராகப் பதவியேற்றபின் இதே ஜூன் மாதம் ஐந்தாம் தேதி சிங்களம் மட்டும் மசோதாவைப் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்து இன்று நாடு இந்த அவல நிலையை அடைந்தது.

இதே பண்டார நாயகாவுக்கு அவர் ஆட்சி பீடமேறிய குறுகிய காலத்துக்குள் இடது சாரிக் கட்சிகளாலும் சோதனையேற்பட்டது.

இடது சாரித் தொழிற்சங்கங்கள் துறை முகத்திலும் மற்றும் சிலதுறைகளிலும் வேலை நிறுத்தம் செய்தன. தமது கோரிக்கைகளை நிறைவேற்ற வேண்டுமெனக் கோரி தொழிலாளர் வேலை நிறுத்தம் தொடர்ந்து நடைபெற்றது.

தொழிலாளர் பிரச்சினையைப் பேசித் தீர்க்கலாமென்றும் வேலை, நிறுத்தத்தைக் கைவிட்டுப் பேச்சுவார்த்தைக்கு பிரதமர் அழைத்தார்.

வேலை நிறுத்தம் நடைபெறும் போதே பேச்சுவார்த்தையை நடத்தலாமென்றும், பேச்சின் முடி வைப் பொறுத்து வேலை நிறுத்தத்தைக் கைவிடலாமென்றும், தொழிற் சங்கத் தலைவர்கள் கூறினர்.

பண்டாரநாயகாவோ வேலை நிறுத்தத்தைக் கைவிட்டால் தான் பேச்சுவார்த்தை என்று பிடிவாதம் பிடித்தார். தொழிற் சங்கத் தலைவர்களும் பேச்சுவார்த்தை நடக்கட்டும். அதன் முடிவைப் பொறுத்து வேலை நிறுத்தத்தைக் கைவிடலாமென்று பிடிவாதமாக நின்றனர்.

இருதரப்பும் இப்படி இழுபறிப்பட்ட சமயத்தில் பிரதமர் பண்டார நாயகா இந்த முட்டுக்கட்டையைத் தீர்க்க ஒரு யோசனை தெரிவித்தார்.

தொழிற் சங்கப் பிரதிநிதிகளுடன் குறித்த தினத்தில் குறித்த நேரத்தில் பேச்சுவார்த்தை தொடங்கும். அதே சமயம் தொழிலாளர்களும் வேலை நிறுத்தத்தைக் கைவிட வேண்டுமென்று பண்டார நாயகா தெரிவித்தார் யோசனை.

இதைத் தொழிற் சங்கத் தலைமையும் ஏற்றது. பேச்சுவார்த்தையும் குறித்த நேரத்தில் (பத்து நிமிஷம் தாமதித்தே தொடங்கியது) தொடங்கியது அதே நேரம் வேலை நிறுத்தமும் கைவிடப்பட்டது.

இப்போது ஏற்பட்டுள்ள முட்டுக்கட்டையையும் இதேபோல் நீக்க முடியும். விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தைக்கு நாளும் நேரமும்,குறித்து அதே நேரத்தில் போர் நிறுத்தத்தை அரசும், அறிவித்தலும் விடுதலைப் புலிகள் மீதான தடையை நீக்கும் அரசின் அறிவித்தலும் அதே நேரத்தில் வெளியிடப்படுவதற்கு அரசு சம்மதித்தால் முட்டுக்கட்டை நீங்கிவிடும். இரு தரப்பின் கௌரவப் பிரச்சினைக்கும், தீர்வு கிடைத்துவிடும்

தந்தை பண்டாரநாயகா காட்டிய வழியை மகள் சந்திரிகாவும் பின்பற்றி இனப்பிரச்சினைக்கு சமாதானத் தீர்வு காண்பதற்குள்ள முட்டுக்கட்டையை முதலில் நீக்கலாமே!

## குடும்ப சுகாதார கல்விக் கருத்தரங்கும் அறிவூட்டலும்

(ஏறாவூர் நிருபர்)

ஐக்கிய நாடுகள் சனத்தொகை நிதியத்தின் அனுசரணையுடன் சுகாதார கல்விப் பணியகத்தின் ஆலோசனையின் பேரில் தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் குடும்ப சுகாதார மாவட்ட வேலைத்திட்டத்தின் கீழ் சுகாதார அறிவூட்டல் கல்விக் கருத்தரங்குகளை கிழக்கு மாகாணத்தில் மாவட்டங்கள் தோறும் நடாத்திவருவதாக மன்றத்தின் மட்டக்களப்பு, அம்பாறைப் பிராந்திய உதவிப் பணிப்பாளர் பொன். செல்வநாயகம் தெரிவித்தார்.

இத் திட்டத்தின் முதற் கட்டங்களாக அம்பாறை மாவட்டத்தில் இரு கருத்தரங்குகள் நடாத்தப்பட்டுள்ளன. கல்முனை நகர மண்டபத்தில் நடாத்தப்பட்ட கருத்தரங்கில் தமிழ்பேசும் இளைஞர்கள் ஐம்பது பேர் கலந்து கொண்டதாகவும் அம்பாறை நகரில் சிங்கள மொழிமூலம் நடாத்தப்பட்ட கருத்தரங்கில் சிங்கள இளைஞர்கள் ஐம்பது பேர் பங்குபற்றியதாகவும் அவர் கூறினார்.

இளைஞர்களுக்கு பருவகாலத்தில் சுகாதாரம் மற்றும் குடும்பநலம் தொர்பான அறிவூட்டல் செய்யும் நோக்கிலேயே இக் கருத்தரங்குகள் நடாத்தப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

பாலியல் துஷ்பிரயோகம், எயிட்ஸ் நோய் குடும்பத் திட்டமும் அவசியமும், குடும்ப சுகாதாரம், கட்டிளம் பருவத்தில் பாலியல் கல்வியின் அவசியம், குடும்பத்தைப் பேணுவதில் ஆண், பெண் பங்களிப்பு, பாலியல் தொடர்பாக ஏற்படும் நோய்கள், தடுப்புமுறை மற்றும் சமூகப் பிரச்சினைகள் குறித்து இக் கருத்தரங்குகளின் போது விளக்கமளிக்கப்படுகின்றன.

எதிர்வரும் பத்தாம் திகதி திருகோணமலையில் இதுபோன்ற கருத்தரங்கு நடாத்தப்படவுள்ளதாகவும், மட்டக்களப்பில் கருத்தரங்கு நடைபெறும் தினம் பின்னர் அறிவிக்கப்படுமெனவும் தெரிவிக்கப்படுகிறது.

❋❋❋

## மாவனல்லைக்கு ரூபா 1 1/2 இலட்சம் மட்டக்களப்பு அன்பளிப்பு

(காத்தான்குடி நிருபர்)

மாவனல்லையில் இடம் பெற்ற சம்பவங்களின் போது பாதிக்கப் பட்டவர்களுக்கு மட்டக்களப்பு, காத்தான்குடி, ஆரையம்பதி பிரதேசங்களிலுள்ள முஸ்லீம்கள் 1 இலட்சத்து 50 ரூபாய் நிதியை அன்பளிப்புச் செய்துள்ளனர்.

காத்தான்குடி பள்ளிவாயல்கள் முஸ்லீம் நிறுவனங்களின் சம்மேளனம் விடுத்தவேண்டுகோளையடுத்தே அப்பகுதி வாசிகள் நன் கொடையை வழங்கினர்.

காத்தான்குடியிலிருந்து மாவனல்லைக்குச் சென்ற பள்ளிவாயல்கள் முஸ்லீம் நிறுவனங்களின் சம்மேளன உயர் மட்டக் குழுவினர் மாவனல்லை ஜும்ஆ பள்ளி வாயல் நம்பிக்கையாளர் சபைத்தலைவர் டாக்டர்.எம்.ஹமீதிடம் நிதியைக் கையளித்ததாக சம்மேளன உபதலைவர் சட்டத்தரணி ஏ.எல்.அப்துல் ஜவாத் எமது செய்தியாளரிடம் தெரிவித்தார்.

## முஸ்லீம் பல்துறைப் படைப்பாளிகள் விபரம் திரட்டப்படுகிறது

(மருதமுனை நிருபர் நழீம் எம்.பதுர்தீன் )

நாடளாவிய ரீதியில் முஸ்லீம் கலை இலக்கிய பண்பாட்டுத் துறைக்கு அரும்பெரும் பணியாற்றிய திறமையும் மூப்பும் படைப்பிலக்கிய ஆக்கமும் கொண்ட பல்துறைப் படைப்பாளிகளின் விபரங்களை முஸ்லீம் சமய ,கலாசார அலுவல்கள் திணைக்களம் திரட்டி வருகிறது.

முஸ்லீம் சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் மேலதிக செயலாளர் றாஸீகின் பணிப்பின் பேரில் மேற்படிப் பல் துறைப்பாளிகளின் விபரங்களை சேகரிக்கும் நடவடிக்கையில் கல்விப் பணிப்பாளர் கலாபூஷணம் மருதூர் ஏ.மஜீட் மேற்கொண்டு வருகிறார்.

மேலும் முஸ்லீம்களின் நுண்கலை ஆவணங்களை பதிவு செய்வதற்கும் ஆவணப்படுத்துவதற்குமாக மேலதிக நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருவதாக கல்முனை வலயக் கல்வி அலவலக பண்பாட்டலுவல்கள் உத்தியோகத்தர் பரதன் கந்தசாமி தெரிவித்தார்.

## கதிரவெளி காளியம்பாள் விழா!

(அரியம்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் வடமுனை என பலராலும் கூறப்படும் வாகரைப்பிரதேச செயலகப்பிரிவில் உள்ள கதிரவெளிக் கிராமத்தில் கோயில் கொண்டருளியுள்ள அருள் மிகு ஸ்ரீ பத்திர காளியம்பாள் ஆலய வருடாந்த மகோற்சவம் இம்மாதம் 3ந் திகதி ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமாகி 9ந் திகதி தீ மிதித்தலுடன் இனிது நிறைவு பெறும்.

இப்பூசை ஆராதனைகளில் சிவஸ்ரீ கி.யோகேஸ்வரன் குருக்களின் தலைமையில் பூசகர் மகேஸ்வரன் கலந்து கொள்வார்.

பூசை ஆராதனை தினங்களில் இரவு வேளைகளில் உள்ளூர் கலை மன்றங்களின் கலை நிகழ்வுகளும் கூட்டுப் பிரார்த்தனைகளும் தொடர்ந்து இடம்பெறும் என ஆலய பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர்.

## நாளை கொக்கட்டிச் சோலையில் சங்காபிஷேக விழா

(அரியம்)

கொக்கட்டிச்சோலை ஸ்ரீதான்தோன்றீஸ்வரர் ஆலயத்தின் வருடாந்த சங்காபிஷேக விழா நாளை ஞாயிறு பகல் இடம்பெறும். மகாகும்பாபிஷேகம் இடம்பெற்ற கடந்த 1998ம் ஆண்டு வைகாசி மாதத்தில் இருந்து வருடாவருடம் சங்காபிஷேக விழா இடம் பெற்று வருவது குறிப்பிடத் தக்கது.

நாளை இடம் பெறும் சங்காபிஷேகமானது மகா கும்பாபிஷேகம் இடம் பெற்று மூன்றாவது வருடமாக இடம் பெறுவதாகும்.

கொக்கட்டிச்சோலை ஸ்ரீ தான்தோன்றீஸ்வரர் ஆலய பிரதம குரு சிவஸ்ரீ மு.கு.சச்சிதானந்தக் குருக்கள் தலைமையில் சிவஸ்ரீ சோதிலிங்கக் குருக்கள் கலந்து கொண்டு இச்சங்காபிஷேகக் கிரிகைகளில் பங்குபற்றுகின்றனர்.

1008 சங்குகளின் தீர்த்தம் நிறைக்கப்பட்டு 1008 மந்திர தோத்திரங்களால் உச்சரிக்கப்பட்ட தீர்த்தத்தினை எம்பெருமானுக்கு அர்ச்சனை செய்யப்பட்டு விஷேட பூசைகள் இடம் பெறும்.

பூசைகள் முடிவில் வலம்புரிச்சங்கினால் அங்கு குழுமியுள்ள பக்தர்களுக்கு சங்குத் தீர்த்தம் வழங்கப்படும். சங்குத் தீர்த்தம் பருகுவதன் மூலம் எமது உடலில் உள்ள நோய்கள் யாவும் தீர்ந்து மனக்கவலை போக்கி மகிழ்ச்சியுடன் வாழமுடியும் என இந்து ஆகமங்களில் கூறப்பட்டுள்ளது.

நாளை இடம் பெறும் சங்காபிஷேக விழா ஆயிரக்கணக்கான அடியார்கள் கலந்து கொள்வார்கள் என ஆலய பரிபாலன சபைத்தலைவர் அ.இராசதுரை தெரிவித்தார்.

## இன்று எண்ணெய்க் காப்பு

(நமது நிருபர்)

மட்டக்களப்பு எல்லை வீதி ஸ்ரீ சிந்தாமணிப்பிள்ளையார் ஆலயத்தில் புதிதாக திருப்பணி செய்யப்பட்டிருக்கும் நவக்கிரக. வைரவ மூர்த்திகளின் நூதன பிரதிஷ்டா மகாகும்பாபிஷேகம் நாளை 3ந் திகதி ஞாயிற்றுக் கிழமை பகல் 11.59க்கும் 1.23க்கு மிடையே சுபமுகூர்த்தத்தில் நடைபெறும்.

இதையொட்டிய எண்ணைக்காப்பு சாத்தும் தைலாபிஷேக நிகழ்வு இன்று சனிக்கிழமை காலை 10 மணி முதல் மாலை 5 மணி வரை இடம்பெறும்.

# வாகன விபத்தில் சங்கர் எம்.பி.உயிர் தப்பினார்; வாகனம் சேதம்; இருவர் காயம்; லொறி பொலிசில்

(காரைதீவு நிருபர்)

பொத்துவில் அனர்த்தத்தை பார்வையிடச் சென்ற சங்கர் எம்.பி வாகன விபத்தில் எம்.பி மயிரிழையில் உயிர் தப்பினார். அம்பாறை மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் குணசேகரம் சங்கர் சென்ற "பஜேரோ" வாகனம் லொறி யொன்றுடன் மோதி விபத்துக்குள்ளானது.

இச்சம்பவம் சியம்பலாண்டு - பொத்துவில் பகுதியில் வீதியிலுள்ள மஹாகொலுகல என்னுமிடத்தில் புதன்கிழமையன்று காலை 10.30 மணியளவில் நடைபெற்றது. பொத்துவிலில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் வீட்டுக்காரர் மாண்ட சம்பவத்தை நேரில் கண்டு விசாரிக்க எம்.பி பொத்துவில் சென்ற வாகனமே விபத்துக்குள்ளானது.

விபத்துக்குள்ளான "பஜரே" வாகனத்தின் முன் பகுதி பலத்த சேதத்துக்குள்ளானது. தற்போது அது சியம்பலாண்டுவ பொலிஸ் நிலையத்திலுள்ளது.

சங்கர் எம்.பி முன் ஆசனத்தில் அமர்ந்திருந்த போதிலும் தெய்வாதீனமாக மயிரிழையில் உயிர் தப்பினார். அவரைக் காப்பாற்ற பின்னாலிருந்து முன்னால் பாய்ந்து சென்ற அம்பாறை அலுவலகப் பொறுப்பாளர் குணரத்தன மற்றும் சாரதி சுமன் ஆகியோர் சிறு காயத்துக்குள்ளானார்கள்.

இவர்கள் சியம்பலாண்டுவ ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்ற பின்பு வெளியேறினர்.

மோதுண்ட "எல்ப்" ரக லொறி பொலிசாரின் கையிலுள்ளது. விசாரணை தொடர்கிறது. எம்.பியின் நிகழ்ச்சிகள் யாவும் ரத்துச் செய்யப்பட்டுள்ளது.

## சுகாதார அறிவுப் பேச்சு போட்டிகளின் முடிவுகள்

(ச.கணேசதாஸ்)

தேசிய சுகாதார வாரத்தை முன்னிட்டு மண் முனைப்பற்று பிரதேசத்திற்குட்பட்ட பாடசாலை மாணவர்களிடையே நடாத்தப்பட்ட பேச்சு போட்டி, சுகாதார அறிவுப் போட்டிகளில் வெற்றியீட்டிய மாணவர்களில் சிரேஷ்ட பிரிவில் மட்/கிரான்குளம் விநாயகர் மகா வித்தியாலயம் மாணவன் பி.சுதரஷன், கனிஷ்ட பிரிவில் தாளங்குடா விநாயகர் வித்தியா லயத்தைச் சேர்ந்த எம்.கஜேந்தாவும் சுகாதார அறிவுப் போட்டியில் ஆரையம்பதி இ.கி.மி. மகாவித்தி யாலய மாணவர்களும் முதலாமிடத்தைப் பெற்றுக் கொண்டனர்.

இந் நிகழ்விற்கு சுகாதார வைத்திய அதிகாரி ஏ.சண்முகநாதனும் ஆரையம்பதி மாவட்ட வைத்தியசாலை வைத்திய அதிகாரி எஸ்.நீதிராஜன், பிரதேச சபைச் செயலாளர் திருமதி.தி.சின்னத்தம்பி ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந் நிகழ்வை பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களான எஸ்சந்திரசிறி, என்.கருணாகரன், என்.விமலசேகரம் ஆகியோர்கள் ஏற்பாடு செய்யப்பட்டது குறிப்பிடத்தக்கது.

## செஞ்சிலுவைக் குழு இடையீட்டாளராக உதவி

(க.ஜெகதீஸ்வரன்)

நடுநிலை இடையீட்டாளராக அனைத்துலக செஞ்சிலுவைச் சங்கக் குழுவின் மட்டக்களப்புத் தலைமைக் காரியாலயம் மே மாத இறுதி வாரம் முதல் மட்டக்களப்பு மாவட்டத்தின் வசதி குறைந்த பகுதிகளில் வாழும் மக்களுக்கு அரச நிறுவனங்களால் வழங்கப்படும் சேவைகள் கிட்டுவதற்கு இரு தடவைகள் உதவியுள்ளதாகத் தெரிவித்துள்ளது.

இவ்விடயம் சம்பந்தமாக மட்டக்களப்புக் காரியாலயம் நேற்று விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

28-05-2001 திங்கட்கிழமை கதிரவெளியில் பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளரின் பணிப்புரைக்கு அமைய விசேட கண் சிகிச்சை முகாம் ஒன்றை நடாத்தியது. இந்த முகாமில் பணியாற்றிய மருத்துவ சேவையாளர்களை அழைத்துச் செல்லவும், தேவையான உபகரணங்களை எடுத்துச் செல்லவும், முகாமில் பணிகள் நடைபெறவும் அனைத்துலக செஞ்சிலுவைச் சங்கக் குழு வழித்துணை வழங்கியது.

இந்த விசேட சிகிச்சை முகாமில் 48 நோயாளர்களுக்கு சிகிச்சையளிக்கப்பட்டதுடன், அவர்களில் ஒருவர் மேலதிக சிகிச்சைக்காக மட்டக்களப்பு அரச போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கடந்த 31ம் திகதி வியாழக்கிழமை பதுளை வீதியிலுள்ள கிராமங்களில் வாழும் மக்களுக்கு அரசாங்கத்தால் வழங்கப்படும் உணவு மற்றும் நிவாரணப் பொருட்கள் 5 லொறிகளில் எடுத்துச் செல்லப்படுவதற்கும் அனைத்துலக செஞ்சிலுவைக் குழு வழித்துணை வழங்கியுள்ளதாக அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒரு நடுநிலை "இடையீட்டாளர்" என்ற வகையில் ஐ.சி.ஆர்.சி சகல தரப்பினருடனும் தொடர்பு கொண்டு மோதல்களால் பாதிக்கப்பட்டுள்ள சாதாரண மக்களுக்கு நன்மை பயக்கும் சேவைகள் மேற்கொள்ளப்படுவதற்கு தாம் உதவி வழங்கி வருவதாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கல்முனை ஆதார வைத்தியசாலை அபிவிருத்திக்கு 1 3/4 கோடி

(அஸ்லம்.எஸ்.மௌலானா)

கல்முனை ஆதார வைத்தியசாலை ஒரு கோடி 80 இலட்சம் ரூபா செலவில் வடக்கு கிழக்கு மாகாண சுகாதார அமைச்சினால் அபிவிருத்தி செய்யப்படவிருப்பதாக கல்முனை பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர். ஏ.எல்.எம்.நஸீர் தெரிவித்தார்.

இதன் மூலம் 93 இலட்சம் ரூபா செலவில் பெண் நோயாளருக்கான விடுதியும் 88 இலட்சம் ரூபா செலவில் வைத்தியர்களுக்கான விடுதிகளும் அமைக்கப்படவுள்ளதுடன் நவீன வைத்திய உபகரணங்கள் கருவிகள் என்பனவும் வழங்கப்படவுள்ளன.

கல்முனை ஆதார வைத்தியசாலையில் அமைக்கப்படவுள்ள கட்டிட நிர்மாணப் பணிகளை ஆரம்பிப்பதற்கான இடங்களை மாகாண நிர்மாணத் திணைக்கள பொறியியலாளர் குழு பார்வையிட்டுச் சென்றுள்ளதாகவும் டாக்டர்.ஏ.எல்.எம்.நஸீர் மேலும் தெரிவித்தார்.

## மலவாசல், சலவாசல் இன்றி பிறந்துள்ள சிசு

(வவுனியா நிருபர்)

புதுக்குடியிருப்பு நேசன் குடியிருப்பைச் சேர்ந்த நிமலராஜ் சுதாசினி தம்பதியர்க்கு கடந்த 25ம் திகதி பிறந்த குழந்தையொன்று மலவாசல், சலவாசல் இன்றிப் பிறந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தற்போது இக்குழந்தை சிகிச்சைக்காக வவுனியா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளது.

அதேவேளை , உடையாக்கட்டு பதுஷா குடியிருப்பைச் சேர்ந்த மாடாசாமி மாதமலர் தம்பதியர்க்கு இதே தினத்தில் பிறந்த குழந்தையொன்று போஷாக்கின்மை காரணமாக ஆபத்தான நிலையில் புதுக்குடியிருப்பு தமிழர் புனர்வாழ்வுக் கழக போஷாக்கு நிலையத்தில் சேர்க்கப்பட்டுள்ளது.

## ''இன்றைய நிலைக்கு எல்லோருமே பொறுப்பு; தீர்வுகாண அனைவரும் சேர வேண்டும்''

(கொழும்பு)

பல்வேறு நெருக்கடிகளை எதிர் நோக்கியிருக்கும் நாட்டை கட்டியெழுப்புவதற்கு அரசியல் கட்சிகளும் பிரஜைகளும் முன் வர வேண்டுமென சர்வமத சம்மேளனம் அறைகூவல் விடுத்துள்ளது.

நாடு தற்போது முகம் கொடுக்கும் பிரச்சினைக்கு ஒருவரை ஒருவர் குறைகூறுவதன் மூலம் தீர்வு காணமுடியாது. மாறாக இன்றைய நிலைக்கு ஒவ்வொருவரும் பொறுப்பாளி என்று உணர்ந்து செயற்பட வேண்டும் எனவும் சர்வதேச சம்மேளனம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

அனைத்து மதங்களினதும் தலைவர்கள் சேர்ந்து பண்டாரநாயக்க ஞாபகார்த்த ,சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நேற்று முன்தினம் நடத்தியப் பேச்சுவார்த்தையின் போது இந்த அறைகூவல் விடுக்கப்பட்டுள்ளது.

நாட்டில் இடம் பெற்று வரும் யுத்தம் முடிவுக்கு வரும் அறிகுறிகள் எதுவும் தெரியாத வகையில் நாடு அழிவுப்பாதையிலேயே சென்று கொண்டிருக்கிறது. நாட்டை அழிவில் இருந்து பாதுகாப்பதற்கு ஒவ்வொருவரும் சிரத்தையுடன் செயற்படுவது இன்று தலையாயக்கடமையாகும்.

அரசியல் கட்சிகள் ஏற்றுக் கொள்ளக் கூடிய சகல சமூகத்தவர்களும் சம உரிமைப் பெறக்கூடிய தீர்வின் மூலமே நாட்டை மீண்டும் கட்டியெழுப்ப முடியும். எனவே காலம் தாழ்த்தாது நியாயமான தீர்வைக்காணும் பொருட்டு எல்லோரும் தூர நோக்கோடு செயற்பட வேண்டும் என்று சர்வமத சம்மேளனம் கூறியுள்ளது.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை அகற்றி ஜனநாயகம் நிலை நாட்டப்பட வேண்டும் என்பது நாட்டு மக்கள் அனைவரதும் கருத்தாகும். அதற்கேற்ப ஜனநாயகத்தை ஒழுங்கு செய்யக்கூடிய அபிவிருத்திப்பணிகளை செயற்படுத்தக்கூடிய ஐக்கியத்தையும் நாட்டின் இறைமையையும் நிலை பெறச் செய்யும் புதிய அரசியல் சட்ட மூலம் உருவாக்கப்பட வேண்டுமென சம்மேளனம் வலியுறுத்தியுள்ளது.

நீதியும் நியாயமுமான தேர்தலை நடத்துவது, அரசியலுக்கு அப்பால் செயற்படக்கூடிய பொது நிர்வாக ஆணைக் குழுவொன்றை நியமிப்பது, அரசியல் வாதிகளுக்கும் குற்றச்செயல்களுக்கும் பொலிஸார் துணையாக நிற்பதை தவிர்க்கும் வகையில் சுதந்திர பொலிஸ் ஆணைக்குழு அமைத்தல், அரசியல் தலையீடு அற்ற நீதி வழங்குவதற்கு உறுதி வழங்குதல், வீழ்ச்சியடைந்துள்ள பொருளாதாரத்தை கட்டியெழுப்புதல் என்பவற்றையும் சர்வமத சம்மேளனம் மேலும் வலியுறுத்தியுள்ளது.

## சோதனையில் கவசமும் கழற்றப்பணிப்பு

(க.ஜெகதீஸ்வரன்)

மட்டக்களப்பு கோட்டைமுனை பாலத்தடி சோதனைச் சாவடியில் இராணுவத்தினர் கடுமையான சோதனைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இவ்வழியால் நகரத்துள் நுழைபவர்களிடம் கடுமையான விசாரணைகள் மேற் கொள்ளப்படுவதுடன் உடற் சோதனைகளும் இடம் பெறுகிறது.

நேற்றுக்காலை 10 மணி முதல் தலைக்கவசம் அணிந்து வந்தவர்கள் தலைக்கவசத்தை கழற்றி கையிலெடுத்து வருமாறு கேட்கப்படுவதை அவதானிக்க முடிந்தது.

## சித்த வைத்தியர்களுக்கு அபின் கிடைக்கவில்லை

(கல்லாறு நிருபர்)

மண்முனை வடக்கு சித்த ஆயுள்வேத வைத்திய பாதுகாப்பு சபையின் வருடாந்த பொதுக் கூட்டம் பிரதேச செயலாளர் கே.கதிரகாமநாதர் தலைமையில் நடைபெற்ற போது பின்வரும் குறைபாடுகள் சித்த வைத்தியர்களால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

ஒரு வருடத்திற்கு மேலாகியும் 15க்கு மேற்பட்ட வைத்தியர்களுக்கு அபின் வழங்காமை. கடந்த ஒக்டோபர் 31 உடன் காலாவதியான மாவட்ட அபின் சபை 7 மாதங்கள் கடந்த நிலையிலும் அமைக்கப்படாமை இச் சபைக்கு தெரிவு செய்யப்பட்ட இந்த வைத்தியர்களான க.நடராசா, எஸ்.கே.தங்கையா ஆகியோரில் அரசாங்க அதிபரால் சிபார்சு செய்து அனுப்பப்பட்ட பெயர்கள் இன்னமும் வர்த்தமானியில் பிரசுரிக்கப்படாமை.

மேற்குறித்த விடயங்கள் குறித்து அங்கத்தவர்கள் தங்கள் விசனத்தை வெளியிட்டனர்.

**களுவாஞ்சிகுடி ஸ்ரீ கண்ணகை அம்மன் வருடாந்த திருச்சடங்கு**

இன்நிகழ்வை ஒட்டி மனிதவலு அமைப்பினால், பத்திரிகைகளான கிழக்கின் கதிரவனான ''தினக்கதிர்'' மற்றும் நாடளாவிய ரீதியிலும், கடல் கடந்தும் எம் உறவுகளுடன் இணைந்துள்ள ''இடி'' யிலும் வெளியான மலர் வெளியீட்டு சிறப்பு நிகழ்வுக்கு உதவிநல்கிய நிர்வாக சபை உறுப்பினர்கள் அனைவருக்கும், ஆலோசகர்கள் அனைவர்க்கும், உதவி நல்கிய அனைவருக்கும் குறிப்பாக வேலவன் ஸ்ரோர் லயன்ஸ் கதிர் – மனோரஞ்சிதராஜா, நிகழ் திட்ட ஆலோசகர், உயர் க.வசீகரன் டாக்டர் – மருத்துவ ஆலோசகர், பிரபல ஒப்பந்தக்காரர்களான லயன்ஸ் வ.சின்னராசா, செயற்திட்ட ஒருங்கிணைப்பு ஆலோசகர்,லயன்ஸ் வீ.ரன்சிதமூர்த்தி (பிரதம) சிறப்பு ஆலோசகர் ந.வன்னியசிங்கம் நிகழ்ச்சிதிட்ட ஆலோசகர், மற்றும் சிவசிறீ மனோகரன் குருக்கள், அம்பிகா ஸ்ரோஸ் – கா.அருள்ராஜா, நிலஅளவை கா.ராஜீராஜா – லக்ஷ்மி ஸ்ரூடியோ உரிமையாளர், ஊடக இணைப்பாளர் திருவாளர் சா.ரவீந்திரன் – இணைப்பாளர் அவர்களுக்கும் உளம் கனிந்த இனிய இன் நல்வாழ்த்துக்களும் நன்றியறிதலும் உரித்தாக அமைப்பு சார்பாக வேண்டி நிற்கின்றோம்.

நன்றி

இவ்வண்ணம் அன்புடன்
அமைப்பின் பதிவாளர்
மா.மாணிக்கராஜா

Advt

**காணி விற்பனைக்கு உண்டு**

மட்டக்களப்பு கோட்டைமுனை புதிய வீதியில் (நம்பர் 1, நெற்களஞ்சியம், அருகாமையில்) 48 பேர்ச்சர்ஸ் காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்பு கொள்ளவும்
132,லேக் றோட் -02
மட்டக்களப்பு

Advt

# 93ம் ஆண்டுக் கலவரத்தில் 9 பேர் கொலை செய்யப்பட்டதுபற்றி விசாரணை

(புதுடில்லி)

**1992ம்**, 1993ம் ஆண்டுக் காலப்பகுதியில் ஏற்பட்ட கலவரங்களின் போது ஒன்பது பேர் கொலை செய்யப்பட்டது தொடர்பாக பம்பாய் முன்னாள் பொலிஸ் அதிகாரி ஒருவரும் ஏனைய 16 உத்தியோகத்தர்களும் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

கலவரத்தை அடக்கும் முயற்சியாக பொலிஸார் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகம் காரணமாக ஒன்பது பொது மக்கள் கொலை செய்யப்பட்டது தொடர்பாக பம்பாய் பொலிஸ் முறைப்பாடு ஒன்றை தாக்கல் செய்திருந்தது. கலவரத்தின்போது துப்பாக்கிப் பிரயோகம் செய்ததை நியாயப்படுத்த முடியாது என்றும் இது மிதமிஞ்சிய செயல் என்றும் நீதவான் ஸ்ரீ கிருஷ்ணா தெரிவித்துள்ளார்.

கலவரத்தை அடக்கும் முகமாக பொலிஸார் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் ஒன்பது முஸ்லிம்கள் கொல்லப்பட்டார்கள்.

இந்தச் சம்பவம் தொடர்பாக ஆராய தலைமை மாநில அரசு நீதவான் ஸ்ரீ கிருஷ்ணா தலைமையில் ஆணைக்குழு ஒன்றையும் நியமித்திருந்தது.

## பாராளுமன்றத்தைக் கலைக்க எதிர்ப்பு

(ஜகார்த்தா)

இந்தோனேசிய ஜனாதிபதி அப்துல் ரஹ்மான் வாஹிட்டுக்கெதிராக பாராளுமன்றத்தில் கண்டனத் தீர்மானம் கொண்டுவருவதை ஆதரித்து பெரும்பாலான உறுப்பினர்கள் வாக்களித்ததைத் தொடர்ந்து பாராளுமன்றத்தை ஜனாதிபதி வாஹிட் கலைக்க உத்தரவு பிறப்பிக்கக்கூடும் என்று எழுந்த வதந்திகளினால் பாராளுமன்றத்தைக் கலைத்துவிடவேண்டாமென்று பிரதான பாதுகாப்பு அமைச்சர் கோரிக்கை விடுத்துள்ளார்.

படைத்தளபதிகளைச் சந்தித்துப்பேசிய பின் பாராளுமன்றத்தைக் கலைக்க வேண்டாமென்று ஜனாதிபதியைக் கேட்டுக்கொண்டார்.




**பாராளுமன்றத்தில் கண்டனத் தீர்மானம் கொண்டுவருவதற்கு ஆதரவாக உறுப்பினர்கள் பெரும்பான்மையாக வாக்களித்ததால் பாராளுமன்றத்தை ஜனாதிபதி வாஹிட் கலைத்துவிடக்கூடாது என்று பிரதம பாதுகாப்பு அமைச்சர் கேட்டிருக்கிறார். ஜூன் 15 நாடுகளின் உச்சி மாநாட்டில் உரை நிகழ்த்துமுன் வெளிவிவகார அமைச்சருடன் இந்தோனேசிய பிரதி ஜனாதிபதி மேகவதி சுகர்னோபுத்ரி ஆலோசனை நடத்துவதை ஜனாதிபதி வாஹிட் உற்றுநோக்கும் கையில் எடுத்த படம்.**

## எகிப்து – சவூதி ஆலோசனை

(ரியாத்)

மத்திய கிழக்கு நிலைமை தொடர்பாக சவூதி அரேபிய மன்னர் வாஹிட் எகிப்திய அதிபர் ஹிஸ்னி முபாரக்குடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டதாக சவூதி அரேபிய வட்டாரங்கள் தெரிவித்தன.

மேற்குக் கரையோரம் காஸாப்பகுதியில் ஏற்பட்டுள்ள வன்முறைகள் தொடர்பாக பிராந்திய நாடான எகிப்தும் சவூதி அரேபியாவும் கவலை தெரிவித்துள்ளன.

## தாய்லாந்துக் கடலில் ஹெலி விழுந்து ஐவர் மரணம்

(பாங்கொக்)

தாய்லாந்துக் கடற்பகுதியில் கடற்படைக்குச் சொந்தமான ஹெலிக் கொப்டர் ஒன்று விழுந்து விபத்துக்கு உள்ளானது. இதில் 5 பேர் உயிரிழந்துள்ளனர். ஒருவர் காணாமல் போயுள்ளார்.தாய்லாந்து ஹெலிக்கொப்டரே தாய்லாந்து கடற்பகுதிக்குள் விழுந்து விபத்துக்குள்ளானது.

காணாமல் போனவர்களை மீட்க கடற்படை தேடுதல் நடத்தி வருகின்றனர். அந்தப் பகுதியில் கடல் கொந்தளிப்புடன் காணப்படு வதினால் மீட்புப்பணிகள் தாமதமாகிவருவதாக கடற்படையினர் தெரிவித்துள்ளனர்.

## உலக வலம்

தொகுப்பு :- பௌஸி

## ஐ.நா.உத்தியோகத்தர்களுக்கு கூடுதலான பாதுகாப்புத் தேவை

(ஜெனிவா)

உலகம் முழுவதும் பணிபுரியும் ஐக்கிய நாடுகள் உத்தியோகத்தர்களுக்கு கூடுதலான பாதுகாப்பை ஐக்கிய நாடுகள் பாதுகாப்புக் கவுன்ஸில் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

1992ம் ஆண்டு முதல் இன்றுவரை உலகம் முழுவதும் பணிபுரிந்த சுமார் 200 ஐக்கிய நாடு உத்தியோகத்தர்கள் உயிரிழந்ததாகவும் இதனைத் தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பாதுகாப்பு கவுன்ஸில் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் உத்தியோகத்தர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

உலகம் முழுவதிலுமுள்ள 140 நிலையங்களில் சுமார் 14 ஆயிரம் உத்தியோகத்தர்கள் கடமை புரிவதாகவும் தெரிகின்றது.

இதில் 15 சதவீதத்தினர் சமாதான பணிகளிலும், ஏனையோர் மனித உரிமை உட்பட பல பிரிவுகளிலும் கடமையாற்றி வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

## வட கொரியா எல்லை மீறியதாக தென்கொரியா குற்றச்சாட்டு

(சியோஸ்)

வடகொரிய ரோந்துப் படகுகள் அத்துமீறி தென்கொரிய எல்லைக்குள் நுழைந்ததாக தென்கொரிய பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

வடகொரிய ரோந்துப் படகு தென்கொரிய கடற் பிரதேசத்துக்குள் பிரவேசித்ததை அடுத்து, வடகொரிய ரோந்துப் படகை விரட்டியடிக்கும் வகையில் தென்கொரியா இரண்டு ரோந்துப்படகுகளை அனுப்பி வைத்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

வடகொரிய ரோந்துக் கப்பல் தென்கொரிய கடற்பரப்பில் 50 நிமிடங்கள் நின்றதாகவும் இவ்வாண்டில் மட்டும் வடகொரியா ஏழு தடவையாக எல்லைக்கோட்டை மீறியுள்ளதாகத் தென்கொரியா கூறியுள்ளது.

## முஷாரப் பதிலில் வாஜ்பாய் திருப்தி

(புதுடில்லி)

காஷ்மீர் பிரச்சினை குறித்து பேச்சு நடத்த இராணுவ ஆட்சியாளர் ஜெனரல் முஷாரப்பை புதுடில்லிக்கு வரும்படி இந்தியப் பிரதமர் வாஜ்பாய் விடுத்த அழைப்பை பாகிஸ்தானிய இராணுவ ஆட்சியாளர் முஷாரப் முற்றிலும் ஏற்றுக்கொண்டதற்கு இந்தியப் பிரதமர் வாஜ்பாய் திருப்தி தெரிவித்திருக்கிறார்.

ஆயினும் இப்பேச்சுவார்த்தைக்கான தேதிகள் இருதரப்பு ஆலோசனைக்குப் பிறகு தீர்மானிக்கப்படும் என்று பிரதமர் வாஜ்பாய் நிருபர்களிடம் தெரிவித்துள்ளார்.

வாஜ்பாய் எடுத்துள்ள முன் முயற்சியை நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலர் வரவேற்றுள்ளனர். பாரத, பாகிஸ்தான் மக்களுக்கிடையே அதிக தொடர்பை ஏற்படுத்த வேண்டும் என்று வெளியுறவு அமைச்சக ஆலோசனைக் கூட்டத்தில் பேசிய எம்பிக்கள் கேட்டுக்கொண்டுள்ளனர்.

# ஏறாவூர் செங்கலடிப் பிரிவின் சுகாதார வார நிகழ்வுகள்

(ஏறாவூர் நிருபர்- அகமட் கபீர்)

சுகாதார அமைச்சு மே 21ந் திகதி முதல் 27ந்திகதி வரையிலான நாட்களை சுகாதார வாரமாக பிரகடனப்படுத்தியுள்ளது. இந்நாட்களில் மட்டக்களப்பு மாவட்டத்தில் சுகாதாரத் திணைக்களம் கல்வித் திணைக்களத்துடன் இணைந்து சுகாதாரம் தொடர்பாக மக்களுக்கு விழிப்புணர்வூட்டக்கூடிய பல்வேறு நிகழ்ச்சித் திட்டங்களை அமுல்படுத்தியது. குறிப்பாக ஏறாவூர் மற்றும் செங்கலடி சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகப்பிரிவில் சுகாதார வாரத்தை முன்னிட்டு நடைபெற்றது. இந்நிகழ்வுகளுக்கு டாக்டர். ஆர்.நவலோஜிதன் டாக்டர்.ஆர்.ரவிச்சந்திரன் ஆகியோர் தனைமை வகித்தனர். மாவட்ட மேற்பார்வை பொது சுகாதாரப் பரிசோதகர் பி.ஜே.விமலநாதன் ஒத்துழைப்பு நல்கினார்.

தேசிய சுகாதார வாரத்தின் முதல் நாள் 21.05.2001 அன்று பாடசாலை அதிபர்களுக்கான கருத்தரங்கு நடைபெற்றது. இதில் பாடசாலைச் சுற்றாடலில் பின்பற்ற வேண்டிய சுகாதார நடைமுறைகள் பற்றி வலியுறுத்தப்பட்டது. மாணவர்கள் மற்றும் பெற்றோர்களுக்கு சுத்தம் பற்றிய விழிப்புணர்வூட்டுவது தொடர்பாகவும் அறிவுறுத்தப்பட்டது. சுகாதார வைத்தியதிகாரி செங்கலடி அலுவலகத்தில் நடைபெற்ற இக் கருத்தரங்கில் நகர்ப்புற மற்றும் கிராமப்புற பாடசாலைகளின் அதிபர்கள் பலர் பங்குபற்றினர். தொடர்ச்சியான சுகாதார வார நிகழ்வுகள் பல ஏறாவூர் மற்றும் செங்கலடிப் பகுதிகளில் நடைபெற்றது.

## நிந்தவூர் பிரிவில் சுகாதார வாரத்தில் பல நிகழ்வுகள்

(மருதமுனை நிருபர்)

நிந்தவூர் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் இம்முறை தேசிய சுகாதார வர்ரம் கடந்த 21ம் திகதி முதல் 5 நாட்கள் நடைபெற்றது.

சுகாதார அமைச்சின் சுற்று நிருபத்திற்கிணங்க நிந்தவூர் பிரதேச சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர்.எம்.ஏ.இப்திகார் கடந்த 16ந் திகதி நிந்தவூர் முக்கிய அமைப்புக்களின் தலைவர்கள் பாடசாலை அதிபர்கள், கிராம அபிவிருத்திச் சங்கங்கள் , விளையாட்டுக்கழகங்கள் என்பவற்றின் பிரதிநிதிகள் அடங்கலாக நிந்தவூர் பிரதேச சபையினையும் உள்ளடக்கிய கலந்துரையாடலை ஏற்பாடு செய்து தேசிய சுகாதார வார ஏற்பாட்டுக்குழு ஒன்றையும் அமைக்கப்பட்டது.

இதன் மூலம் ஒலிபெருக்கி மூலம் பொதுமக்களுக்கு பொது அறிவித்தல் விடுக்கப்பட்டது. துண்டுப்பிரசுரங்களும் விளக்கப்படங்களும் விநியோகிக்கப்பட்டது.

## புகைத்தல் எதிர்ப்பு தின விழிப்புணர்ச்சிக் கூட்டம்

(பாண்டிருப்பு நிருபர் கேதீஸ்)

சர்வதேச புகைத்தல் எதிர்ப்பு தினத்தை முன்னிட்டு கல்முனை தமிழ் பிரதேச செயலகத்தின் ஆதரவுடன் கல்முனைப் பிரம்ம குமாரிகள் இராஜயோகா நிலையத்தினரால் புகைத்தலுக்கு எதிரான விழிப்புணர்ச்சிக்கூட்டம் 30.05.2001 அன்று கல்முனை தமிழ் பிரதேச செயலகத்தில் நடாத்தப்பட்டது.


இக்கூட்டத்திற்கு பிரதேச செயலாளர் ஏ.கே.தவராசா, மற்றும் கிராம உத்தியோகத்தர்கள், அதிகாரிகள், பொதுமக்கள் என நூற்றுக்கணக்கானோர் வருகை தந்திருந்தனர்.

பிரம்ம குமாரிகள் இராஜயோகா நிலைய சகோதரர் விக்கி, சகோதரி கோபி ஆகியோர் இக்கூட்டத்தில் புகைத்திலினால் ஏற்படும் தீமைகள், புகைத்தலைத் தடுக்கும் வழிமுறைகள், புகைத்தல் மனித உடலை எவ்வாறு பாதிக்கின்றது என்பது தொடர்பாக விளக்கமாக உரையாற்றினார்கள்.

## பூ நொச்சி முனையில் கல்நாட்டு விழா


கடந்த 30.05.2001 புதன் கிழமை காலை பத்து மணிக்கு மண்முனை வடக்குப் பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள வலயம் -01 கல்லடி பிரிவிற்குட்பட்ட பூநொச்சி முனைக் கிராமத்தில் சமுர்த்தி சமூக அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் மதகு அமைப்பதற்கான அடிக்கல் நாட்டு விழா வைபவரீதியாக நடைபெற்றது.

இவ்வைபவத்தில் திருமதி. பத்மா ஜெயராஜா, ஏ.பி.ரசூல், மௌலானா, ஏ.ஆர்.எம்.மன்சூர், ஏ.சி.கனிபா, ராதாகிருஷ்ணன், ஏ.சி.எம்.சம்சுதீன், எம்.ஏ.அக்பர், வி.டி ரிஸ்வி, பி.உமாபதி, எம்.ஏ. ஆமினா உம்மா, எம்.எம். குழந்தையும்மா ஆகியோரும் மற்றும் பொது மக்களும் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.







மட்டக்களப்பு இராமகிருஷ்ணமிஷன் பவள விழாக்குழுவின் அனுசரணையுடன், கொக்கட்டிச்சோலை ஸ்ரீ இராமகிருஷ்ண தமிழ் மகாவித்தியாலயத்தில் கடந்த ஞாயிறன்று (27-05-2001) வைத்திய முகாமில் பிடிக்கப்பட்ட படங்களையே இங்கு காண்கிறீர்கள். சுமார் மூவாயிரம் பேர் சிகிச்சை பெற்ற இம்முகாமில் இருதய நோய் சிகிச்சை நிபுணர் வைத்திய கலாநிதி வே.விவேகானந்தராஜா தலைமையில் இருபது வைத்தியர்களும் பல தாதியரும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.








## அடுத்த வருடத்துக்குரிய பாட நூல்கள்

# இருபது இலட்சம் அச்சிடப்பட்டு விட்டது

### —கல்வியமைச்சர் சுசில் பிரேம் ஜயந்த்—

(காரைதீவு நிருபர்)

"அடுத்த ஆண்டுக்குரிய இலவசப் பாடநூல் அச்சுப் பதிப்பு வேலைகளில் 70 வீதத்தை அரச அச்சக கூட்டுத்தாபனத்திடமும், மீதி 30 வீதத்தை தனியார் அச்சகத்திடமும் வழங்கியுள்ளோம். அவற்றில் இது வரை 02 மில்லியன் நூல்கள் இதுவரை அச்சிடப்பட்டு முடிவடைந்துள்ளது. என்று கல்வியமைச்சர் சுசில் பிரேம் ஜயந்த் தன்னை இசுருபாயாவில் சந்தித்த இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கத்தூதுக் குழுவிடம் தெரிவித்தார்.

இவ்வருடம் பிறந்து 05 மாதங்களாகியும் இன்னும் பாடநூல்கள் முழுமையாக மாணவர்களைச் சென்றடையவில்லை. சுமார் 25 வீத பாடநூல்கள் மாணவர்களுக்கு விநியோகிக்கப்படவில்லை என்று தமிழர் ஆசிரியர் சங்கம் வினவியபோதே அமைச்சர் மேற்கண்டவாறு பதிலளித்தார். அமைச்சர் மேலும் தெரிவித்ததாவது:-

ஆசிரியர்களுக்கான செயலாற்றுகைத்திட்டம் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது. அது புதிய வடிவில் ஆசிரிய தொழிற்சங்கங்களின் அனுசரணையுடன் மீண்டும் அமுலுக்கு வரும்.

இடையில் குறுக்கிட்ட பொதுச் செயலாளர் த.மகாசிவம் பாடசாலை மட்ட கணிப்பீட்டுத் திட்டம் பலத்த பிரச்சினைகளை ஆசிரியர் மத்தியில் ஏற்படுத்தி வருகிறது. 10 பாடத்திற்கு சுமார் 100 கணிப்பீட்டுப் பரீட்சை நடாத்த ஆசிரியர் படும் பாடு அதிகம் பலத்த வேலைப் பழுவை சுமத்தும் இத்திட்டத்தையும் கைவிட வேண்டும் என்றார். அமைச்சர் சிரித்தவாறு பாடசாலை மட்ட கணிப்பீட்டுத் திட்டத்தில் பரீட்சைகளின் எண்ணிக்கைகளை குறைக்க நடவடிக்கை எடுக்கிறேன் அது நவீனமயப்படுத்தப்பட்டு பைலட் திட்டமாக பாடசாலைகளிலும் தெரிவு செய்யப்பட்ட தேசிய பாடசாலை களிலும் அமுல்படுத்தப்படும் என்றார்.

## முழங்காவிலில் இருவருடங்களில் 46 குழந்தைகள் இறந்து பிறந்தன!

(வவுனியா நிருபர்)

தாய்மாரின் போஷாக்கின்மை மற்றும் நோய்க்காரணிகளால், முழங்காவில் சுற்றியல் கூறு பகுதியில் கடந்த இரு ஆண்டுகளில் 46 குழந்தைகள் இறந்து பிறந்துள்ளன.

வன்னிப் பகுதிகள் மீது கடந்த 10 வருடங்களாக அரசு விதித்துள்ள பொருளாதார தடை மற்றும் படை நடவடிக்கைகளினால் ஏற்பட்ட இடப்பெயர்வுகளாலேயே இந்நிலை தோன்றியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

1999ஆம் ஆண்டு 28 சிசுக்களும் 2000ம் ஆண்டில் 18 சிசுக்களுமென மொத்தம் 46 குழந்தைகள் இவ்வாறு இறந்து பிறந்துள்ளன.

இது தவிரவும் இரு தாய்மார்ப் பிரசவத்தின் போது மரணமெய்தியதாகவும், மொத்தமாக 80 பேர் இரு ஆண்டுகளிலும் இப்பகுதியில் மரணமடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## புளொட் முக்கியஸ்தரின் இறுதிக் கிரியைகள்

(வவுனியா)

மன்னாரில் வைத்து கடந்த செவ்வாயன்று சுட்டுக்கொல்லப்பட்ட தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின் (புளொட்) அரசியல் துறை நிர்வாகப் பொறுப்பாளர் தமிழ்வாசனின் இறுதிக் கிரியைகள் நேற்று முன்தினம் வவுனியா கோயில் குளத்திலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்றது.

இறுதிக் கிரியைகளில், ஈ.பி.டி.பி, ரெலோ, ஈ.பி.ஆர்.எல்.எவ் வரதர், சுரேஷ் அணியினர் எனப்பல தமிழ்க்கட்சிப் பிரமுகர்களும் கலந்து கொண்டனர்.





**சுகாதார வைத்தியதிகாரி பிரிவு மட்டக்களப்பில் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் வலையிறவுப் பகுதியில் பாடசாலைகளுக்கு இடையிலான சுகாதார வாரப் போட்டிகள் நடாத்தப்பட்டன.**

**(1) கட்டுரைப் போட்டி ( தொற்றும் , தொற்றாத நோய்கள்) 1ம் இடத் தினைப் பெற்ற சு.ஜெயச்சந்திரா மாணவிக்கு ஸ்ரீமுருகன் வித்தியாலயம் திருப்பெருந்துறை அதிபர் க.நவரெட்ணராசா பரிசு வழங்கு வதையும்,**

**(2) பேச்சுப் போட்டியில் 1ம் இடத்தினைப் பெற்ற மாணவன் செல்வசிகாமணி சுரேந்தருக்கு (புளியடிமுனை மகாவித்தியாலயம் சத்துருக்கொண்டான்) பகுதி பொதுசுகாதாரபரிசோதகர் பொ.கிரு பானந்தன் பரிசு வழங்குவதையும்,**

**(3) பொது அறிவுப் போட்டியில் 1ம் இடத்தினைப் பெற்ற தேவதாஸ்-றோகினி புது நகர் விக்னேஸ்வரா வித்தியாலய மாணவிக்கு அதிபர் க.செல்வகணேசன் பரிசு வழங்குவதையும் படத்தில் காணலாம். மற் றும் அனைத்து போட்டிகளுக்கும் 2ம், 3ம் இடங்களைப் பெற்ற மாணவ மாணவிகளுக்கும் பரிசில்கள் வழங்கப்பட்டதுடன், பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பொ. கிருபானந்தன் தொற்றும் நோய்கள், அயடின் குறைபாடு போன்ற கலந்துரையாடலும், திருமதி. ந.குருஸினால் காதாரப் பழக்க வழக்கங்களைப் பற்றிய கலந்துரையாடலும் நடைபெற்றது.**

# கருத்தரங்கு

## இது உங்கள் பக்கம்

இப்பகுதி வாசகர்களாகிய உங்களுக்கெனவே ஒதுக்கப்பட்டுள்ளது. இதில் சமூக, அரசியல், பொருளாதார, விஞ்ஞானம் மற்றும் கலை, இலக்கியம் சார்ந்த உங்களது கருத்துக்களையும் விமர்சனங்களையும் நீங்கள் எழுதலாம். இனி இது உங்கள் பக்கம்.

ஆசிரியர்

# சூழலின் பாதுகாப்பு

## ஆக்கமுறுகின்றதா அழிவடைகின்றதா?

இன்றைய காலநிலையைப் பயன்படுத்திப் பல போலிகள் புத்திசாலிகளாகத் தம்மைப் பிரகடனப்படுத்த முயல்கின்றனரென்பது அநேகருக்குத் தெரியும். ஆனால் நமக்கென்ன என்று மௌனம் சாதித்து விடுகின்றனர். வம்புகளில் மாட்டிக் கொள்வானேன் என்ற எண்ணமே இதற்குக் காரணம். ஆனால் இன்னமும் நாம் உண்மையை உணரவில்லை, இன்னமும் ஏமாற்றலாமென்று அவர்கள் நினைத்து விடக்கூடாதென்பதற்காக நாம் சில விடயங்களை வெளிச்சத்துக்குக் கொண்டு வரத்தான் வேண்டும்.

என்னடா அர்த்தமில்லாமல் குறைகளை உசுப்புகிறாயென்று புறுப்புறுக்கின்றீர்களா? இதோ' உடைத்துச் சொல்கிறேன் என் கூற்றில் உண்மையுண்டா இல்லையா என்பதை உங்களுக்குள்ளே உணர்ந்து கொள்ளுங்கள். ஒரு பானைச் சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்பார்களல்லவா? யாரென்று குறிப்பிடாமல் சம்பவமொன்றைச் சொல்கிறேன் சரியா என்று மனதுக்குள் கேட்டுப்பாருங்கள். நகருக்குள்ளே ஒரு கடை நடக்கின்றது. கடைக்கு மாத வாடகை மூவாயிரம் ரூபாய், கூலியாட்கள் சம்பளம் ஆறாயிரம், லைட் பில் இருநூறு, தருமச் செலவு நானூறு தேநீர் சிற்றுண்டிச்செலவு நானூறு ஆக மொத்தம் ஒரு மாதம் இந்தக் கடையின் பெயரால் நடக்கும் மாதச் செலவு ரூபாய் பத்தாயிரம்முப்பதால் பிரித்தால் நாளொன்றுக்கு அண்ணளவாக ரூபாய் முந்நூற்றி முப்பத்திரண்டு ரூபாய் செலவு நடக்கிறது. இந்தக் கடையில் நாளொன்றுக்கு நூற்றி இருபது ரூபாய் தான் சராசரியாக வியாபாரம் நடக்கிறதென்றால் இந்தக் கடை நடத்துவதில் அர்த்தமிருக்கின்றதா? ஒரு நாள் கடையைத் திறந்து வைபதால் இரு நூறு ரூபாய் நட்டமடைகிறதென்றால் அந்தக் கடையைத் திறக்காமல் விடுவது நல்லதல்லவா? இந்தச் சிந்தனை அந்தக் கடைக்காரருக்கு வரவில்லையென

**திமிலை மகாலிங்கம்**

றால் அவர் கடன்காரராவதில் என்ன ஆச்சரியம்?

அதே நேரத்தில் இன்னுமொருவரைப் பற்றிக் கூறுகிறேன் கேளுங்கள். சப்பாத்து வேலைகள் செய்யும் ஒருவர் ஞாயிற்றுக் கிழமைகளில் கடையைப்பூட்டி விட்டார். அடுத்த நாள் அவர் கடை திறந்திருந்தார். அவரிடம் கேட்டேன் முதலாளி ஞாயிற்றுக்கிழமை ஆசிரியர்களுக்கு லீவு மாணவர்களுக்கும் ஓய்வு கந்தோர்காரருக்கும் லீவு அன்றைக்கு இவர்களெல்லாம் வந்து உங்களிடம் வேலையை முடித்துக் கொள்ள வசதியாக இருக்குமே. நீங்கள் ஞாயிற்றுக் கிழமைகளிலும் கடையைத் திறந்து வைக்கலாமே என்று. அதற்கு அவர் என்ன சொன்னார் தெரியுமா?

நான் கடையைத் திறந்தால் வேலை செய்யும் இருவருக்கும் நானூறு ரூபாய் எனக்கு முந்நூறு ரூபாய் லைட்செலவு தேனீர் செலவு எல்லாம் சேர்த்து எண்ணூறு ரூபாய் செலவாகும். அன்றைய தினம் எப்படியும் இருநூறு ரூபாய்க்கு மேல் உழைக்க முடியாது. ஆக அறுநூறு ரூபாய் நான் நட்டமடைய வேண்டும். இது தேவைதானா? அவரின் கேள்வியில் நியாயம் இருக்கிறதல்லவா?

சம்பந்தமில்லாமல் கடைக்கணக்கு எழுதுகிறாரே வேறொன்றும் கிடைக்கவில்லையா என்று நினைத்து விடாதீர்கள். கடைக்கணக்கை நான் உதாரணத்துக்குத் தான் எடுத்தேன். ஆனால் இதே அடிப்படையில் அவதானிக்க வேண்டியவை அநேகம் இருக்கின்றது. ஒன்றிரண்டை எடுத்துச் சொல்கிறேன் உண்மை உண்டா இல்லையா என்று சிந்தித்துப் பாருங்கள்.

சமூகசேவையென்று சொல்லிக் கொண்டு சிலர் ஓட்டமாக ஓடித்திரிவதைக் காண்கிறோம். இதிலே கால்பங்குப் பேரை இந்தத் தலைப்பிலே சேர்த்துக் கொள்ளலாம். மீதிப் பேர் சுய தேவைகளுக்காகத்தானே ஓடுகின்றார்கள் இல்லையா? இப்படி ஓடித் திரிபவர்கள் வேலைகள் முடிந்து இரவு படுக்கைக்குப் போவதிலிருந்து இன்று நான் சமூக சேவை ஏதும் செய்திருக்கிறேனா என்று தம்மைத் தாமே கேட்டுப்பார்த்தால் உண்மை விளங்கிவிடும். ஏன் நான் இவைகளை இழுக்கிறேன் தெரியுமா? இன்றைய உலகின் உண்மைக்கும் பொய்க்கும் வித்தியாசம் கண்டு பிடிக்க முடியவில்லை. தாங்கள் யாரென்று அறிமுகப்படுத்துவதற்கும் அவர்கள் தினசரி செய்யும் கடமைகளுக்கும் சம்பந்தமே இருப்பதில்லை. இனங்களுக்குள் ஐக்கியத்தையேற்படுத்தும் குழுவென்று ஒரு குழு இருக்கும். அந்தக் குழுவினர் முக்கிய உறுப்பினர்கள் ஊரிலே இனப்பிரச்சினைகளுக்கு மூல காரணமானவர்களாக இருப்பார்கள். அலுவலகத்திலே அள்ளிவைப்புக்கலையில் திறமைசாலி பலரின் உத்தியோகங்களின் அறுப்புக்குக் காரணகாரராக இருப்பார் அவர் கந்தோரை கழுவியெடுத்துக் கொண்டு கரையேறி ஒதுங்கும் காலத்தில் சமாதான நீதவான் என்ற பட்டயம் அவரின் இருப்பிடத்திலே காட்சியளிக்கும் பல பத்திரிகைகளை நடத்தியிருப்பார். பத்திரிகைகளின் பிழைகளைத் திருத்தியே தனது கண்களைப் பிழையாக்கிக் கொண்ட அனுபவம் பழுத்த 'ஆசிரியராக இருப்பார். பலர் வந்து அறுத்துக் கொட்டி அனுபவசாலி என்று வாயால் பட்டம் சூட்டிச் செல்வார்கள். ஆனால் பத்திரிகைத்துறையின் ஐம்பவான் என்று இன்றைய இளைஞர் ஒருவர் மேடையிலேறிப் பல 'விருதும் பற்றிக் கொள்ளுவார். கறிவாங்கக் கொண்டு போன கைச் செலவுப் பணத்துக்குப் பேப்பர் வாங்கிக் கவிதையாகவும், கட்டுரையாகவும் எழுதிக் குவித்து விட்டுக் களைத்துப் போயிருப்பார் அந்த வயது போன கவிஞன். ஆனால் எண்ணிப் பதினொரு கவிதைகள் எழுதிய ஒருவர் கவிஞர் காவலன் என்ற பட்டம் வாங்குவார்.

முன்பெல்லாம் ஒருவருக்குப் பட்டம் கொடுப்ப தென்றால் பலபேரின் அபிப்பிராயம் கேட்டுச் சிலரின் சாதனைகளைக்கணக்கிலெடுத்து ஏதோ ஒரு குழு சிபார்சு செய்யும் இப்போதெல்லாம் அப்படியில்லை. என்னிடம் இன்ன இன்ன பெரியவர்களின் சிபார்சுக் கடிதம் இருக்கின்றது. எனக்கு விருது தரும் பட்சத்தில் நான் இன்ன இன்னாருக்கு நன்றியோடு நடப்பேன் என்று பிரகடனம் செய்து விண்ணப்பம் சமர்ப்பிப்பவர்களுக்கே இப்போது பட்டம் வழங்கப்படுகின்றது. கடன் பட்டுப் புத்தகம் எழுதி அச்சு வாகனமேறுவதற்காக வீடு வளவை ஈடு வைத்த ஏழை எழுத்தாளன் முருங்கை இலைச் சுண்டலும் சோறும் சாப்பிட்டுக் கொண்டிருக்க ஆறு புத்தகங்களைடைப் செற்றிங் முறையில் அச்சடித்துப் போட்டிக்கு அனுப்பிய அறிமுகம் உடையவரொருவர் புத்தக வெளியீட்டுக்குரிய பரிசாகப் பத்தாயிரம் பெற்றுக் கொள்வார். (இது பற்றி ஒரு பேப்பரில் வந்திருக்கிறது).

சமூக சேவைத் துறையில் ஆரம்பித்துப் புத்தக வெளியீட்டுக்கு வந்து விட்டேன் பாருங்கள். எங்கும் முறை தப்பி விட்டதென்றால் எதனை முதலிற் சொல்லுவது என்ற சிக்கல் தான் இதற்குக் காரணம். மீண்டும் சமூக சேவைக்கே வந்து விடுகிறேன். சூழல் சூழல் என்று அண்மைக்காலத்தில் பேசப்படுகின்றதல்லவா? ஏன் சூழல் பாதுகாப்புத்தினமென்று ஒரு தினம் கூட அண்மையில் (5-6-2001) வருகின்றது. பலருக்கு ஞாபகமிருக்கும் என நினைக்கின்றேன். உண்மையிலே சூழல் பாதுகாப்பு என்று கிழக்கு மாகாணத்தில் ஏதாவது இருக்கின்றதா என்பது நமக் கெல்லாம் தெரிவதாக இல்லை.

காடுகள் அழிக்கப்படுகின்றன, தேக்கம் சோலைகள் வேரோடு பிடுங்கப்படுகின்றன. மற்ற இடங்களில் பனம் கன்றுகள் நாட்டப்படுகின்றன. நமது பகுதியிலே பனை மரங்கள் அழிக்கப்படுகின்றன. கடலரிப்பு, மண்ணரிப்பு என்று மரங்கள் மற்ற இடங்களில் பாதுகாக்கப்படுகையில் நமது பிரதேசத்தில் எல்லாமே அழித்தொழிக்கப்படுகின்றன. இதனால் பறவையினப்பெருக்கம், மிருக இனப்பெருக்கம் எல்லாமே அழிந்து போகின்றது. உயிரினங்கள் பல உற்பத்திக்கு வழியின்றி மாந்தி மறைந்து போகின்றன. சூழல் பாதுகாப்பின் பெயரால் கடமை செய்பவர்களென யாராவது இருந்தால் இந்தச் சூழல் அழிவு பற்றி ஏதாவது செய்தார்களா?

ஏன் செய்யவில்லை வருடம் ஒரு தடவை பட்டறை வைக்கின்றோம், பரிசுகள் கொடுக்கின்றோம் என்று சொல்வார்கள் அது உண்மையாக சர்வதேச ரீதியாக உலக நாடுகளும் உணரும் வண்ணம் ஏதாவது செய்யப் பட்டதா? என்றால் இல்லையென்ற பதில் தான் கிடைக்கின்றது. ஆட்களை அடித்து உதைத்துக் காயப்படுத்துவதற்கு ஒரு குழு அடிவாங்கிய காயக்காரர்களுக்கு மருந்து போடுவதற்கு ஒரு குழு அடிப்பதை நிறுத்திக் கொண்டால் மருந்து போடும் குழு தேவையில்லையே என்ற சிந்தனை ஏன் வரவில்லை. சிலருக்குச் சில சிந்தனைகள் மட்டுந்தான் வருமோ?

சரி போனது போய் விட்டது எதிர்வரும் சூழல் பாதுகாப்பு தினத்தில் நமது சூழல் மாசடைவதையும் சூழல் நாசமடைவதையும் அகில உலகமும் அறியும் அளவுக்கு ஏதாவது செய்ய எவராவது முன்வருவார்களா? எவரும் முன் வராதபட்சத்தில் சூழலின் பெயரால் பெயர் பதிந்து கொண்டிருப்பவர்கள் இந்தச் சூழலிலிருந்து சற்று ஒதுங்கிக் கொள்வார்களா? பொறுத்திருந்து பார்ப்போம் இல்லையா?

# இலங்கையில் சமாதானம்

தற்போதைய இலங்கை அரசியல் நிலையில் நோர்வே சமாதானத்தூதுவர் அமெரிக்கா சென்றார். இலங்கையின் சமாதானத்திற்கு அமெரிக்காவின் ஆலோசனையை நாடினார். இந்தியாவிற்கான இலங்கைத் தூதுவர் அவசரமாக இந்தியா அழைக்கப்பட்டார். அத்துடன் இலங்கை ஜனாதிபதி அவசரமாக அமைச்சரவைக் கூட்டத்தை கூட்டி தற்போதைய நிலையில் சில சமயம் இலங்கை அரசாங்கம் வெளிநாடுகளின் வற்புறுத்தலுக்கமைய விடுதலைப் புலிகளின் தடையை தற்காலிகமாக நீக்கி தற்காலிகமான போர் நிறுத்தத்தையும் செய்ய முன்வரலாம். அப்படி அவர்கள் முன் வந்தால் அடுத்த கட்டமாக பேச்சுவார்த்தை மேசைக்கு இருதரப்பும் சென்றாலும் அங்கு மேலும் சிக்கலான பிரச்சினை இருக்கிறது.

அதாவது இலங்கை அரசியல் யாப்பில் மாற்றம் செய்வதானால் அரசாங்கத்திற்கு 2/3 பெரும்பான்மைப் பலம் வேண்டும். அல்லது சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும். தற்போதைய அரசாங்கத்தினால் இந்த இரண்டையும் நடத்தக்கூடிய காரியமாகத் தோன்றவில்லை. பெரும்பான்மை பலம் இல்லாத நிலையில் தற்போதைய அரசு தோழமைக் கட்சிகளின் ஆட்டத்திற்கு இழுபடும் நிலையில் இருந்து கொண்டு இப்பிரச்சினைக்கு எப்படி தீர்வுகாண முடியும்.'

இலங்கையின் இரண்டு பெரிய கட்சிகளும் ஒவ்வொரு தடவை பாராளுமன்றத்தில் அறுதிப்

**ராதையன்**

பெரும்பான்மை பெற்றிருந்தன. அந்த இரண்டு வேளைகளிலும் தமிழ் அரசியல் கட்சிகள் தந்தை செல்வநாயகத்தின் தலைமையில் அந்த அரசாங்கங்களுக்கு இனப்பிரச்சினை சமாதானத்தீர்வுக்காக பலத்த அழுத்தங்களை கொடுத்திருந்த போதிலும் அப்போதைய பிரதமர் எஸ்.டபிள்யு.ஆர்.டி. பண்டாரநாயகாவும் சரி அதன் பின் ஐ.தே.க.ஜனாதிபதி ஜே.ஆர். ஜயவர்த்தனாவும் சரி இனப்பிரச்சினையை முடிவுக்கு கொண்டு வரத்தவறியதுடன் மேலும் சிக்கல்களை உருவாக்கி விட்டு சென்றுள்ளார்கள். இதற்கு காரணம் அவர்கள் தாங்கள் இருக்கும் காலங்களில் தங்கள் ஆட்சியை மேலும் நீடிக்கும் குறுகிய நோக்குடன் செயல்பட்டார்கள். இந்த நாட்டில் இப்படி ஒரு இரத்தக்களரிக்கு வழி சமைத்தது மாறாத வடுவையும் ஏற்படுத்தி விட்டது தான் துரதிஷ்டம்.

ஆனால் தற்போதைய சூழலில் தெற்கில் மீண்டும் இனவாதம் தூண்டப்படும் நிலை அதிகரித்து செல்லும் இவ்வேளையில் தற்போதைய அரசாங்கம் இந்தப் பிரச்சினையை எப்படி எதிர்கொள்ளப் போகிறது. இந்த அரசாங்கம் இதய சுத்தியுடன் செயல்பட்டாலும் அரசாங்கத்துக்குள் இருக்கும் சில இனவாதப் போக்குடையவர்களும், எதிர்க்கட்சியில் இருக்கும் சில இனவாதப் போக்குடையவர்களும் இதற்கு உடன்பட மாட்டார்கள். இதனால் அரசாங்கத்திற்கு மேலும் நெருக்கடிகள் ஏற்படும் வாய்ப்புகளே அதிகம். அப்படி ஒரு சூழ் நிலை வரும் போது அரசாங்கம் சமாதான முயற்சியை கைவிட்டு மீண்டும் போருக்கு செல்லும் நிர்ப்பந்தமும் ஏற்படலாம். அப்படி மீண்டும் போர் வெடித்தால் இலங்கை மக்களின் நிலை சோமாலியாவில் உள்ள மக்களை விட கேவலமான ஒரு நிலைக்கு தள்ளப்படும்.

25 வருடங்களின் முன் இலங்கை ரூபாவின் பெறுமதியும், சிங்கப்பூர் டொலரின் பெறுமதியும் ஒரே அளவில் இருந்தன. இன்று ஒரு சிங்கப்பூர் டொலர் 50 ரூபாவிற்கு மேல் சென்று விட்டது. இந்த 25 வருடங்களில் இலங்கை 50 வருடங்களுக்கு மேல் பின் தங்கிய நிலைக்கு தள்ளப் பட்டுள்ளது. ஒரு நூற்றாண்டு சென்றாலும் அடைக்க முடியாத கடன்கார நாடாகி விட்டது. எமது நாட்டில் ஒரு இயற்கை அனர்த்தம் வந்து கடனாளியாகியிருந்தால் பரவாயில்லை. ஆனால் தெரிந்து கொண்டே கோடிக்கணக்கான ரூபாய்களுக்கு செல்களையும் தோட்டாக்களையும் வாங்கி சொந்த மண்ணையே அக்கினிச் சுவாலை ஆக்கிய கொடிய கலாசாரம் இத்தோடு முடியட்டும். தற்போதைய ஆட்சியாளரும் சரி, விடுதலைப்புலிகளும் சரி எதிர்க்கட்சியினரும் சரி சிந்தித்து செயற்பட்டு எதிர்கால சந்ததியினர் சந்தோஷமாக வாழ வழி காட்டுவார்கள் என நாங்களும் இறைவனை வேண்டுவோம்.




# கல்லடி பொதுச் சுகாதாரப் பிரிவில் சுகாதார வார பேச்சுப்போட்டி

(அரியம்)

**தே**சிய சுகாதார வாரத்தையொட்டி கல்லடி பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பிரிவிலுள்ள பாடசாலைகளுக்கிடையே நடை பெற்ற பேச்சுப்போட்டிகள் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் வி.விஜயகுமாரினால் 23.05.2001 அன்று நடாத்தப்பட்டது. மட்டக்களப்பு உதவிச் சுகாதார அதிகாரி திருமதி.ஆர். சிறிதரன் மேற்பார்வை பொதுச் சுகாதார பரிசோதகர் எம்.நாகலிங்கம் சுகாதார கல்வி உத்தியோகத்தர் ஜி.ரெட்ணகுமார் ஆகியோர் நடுவர்களாகக் கலந்து கொண்டனர்.

**போட்டி முடிவுகள்**

**1ம் இடம் :-** ரங்கநாதன் அபிராமி, விவேகானந்தா மகளீர் மகாவித்தியாலயம், கல்லடி.

**2 இடம் :-** கனக சுந்தரம் நிரோஜினி, மட்/கல்லடி முகத்துவாரம் விபுலானந்தா வித்தியாலயம்

**3ம்இடம :-**ஹரிதாஸ் பிரவீணன், மட்/சிவானந்தா தேசிய பாடசாலை

**சிரேஷ்ட பிரிவு :**

**1ம் இடம்:-** விவேகானந்தராஜா, விஜேமயூதினி, மட்/கல்லடி முகத்துவாரம் விபுலாநந்தா வித்தியாலயம்

**2ம் இடம் :-** யோ.சியாமினி கலிஸ்ரா, விவேகானந்த மகளிர் மகா வித்தியாலயம்

**3ம் இடம்:-** கம்புநாதன் நரேந்திர குமார், சிவானந்தா தேசிய பாடசாலை, கல்லடி.



வெற்றி பெற்றவர்களுக்கான பரிசளிப்பு வைபவமும் இடம் பெற்றது.

சிரேஷ்ட பிரிவில் 1ம் இடம் பெற்ற மாணவியான வி. விஜேமயூதினி பரிசு பெறுவதைப் படத்தில் காணலாம்.

## டெஸ்ட் போட்டியில் சாதனை படைத்த கும்பிளே விளையாட முடியாத நிலை

**பா**கிஸ்தான் அணிக்கு எதிராக 1999ம் ஆண்டு பெப்ரவரி மாதம் நடைபெற்றதான டெஸ்ட் போட்டியில் 10 விக்கற்றுகளைக் கைப்பற்றி உலக சாதனை படைத்த அணில் கும்பிளே கையில் காயம் காரணமாக 6 மாத காலம் விளையாடமுடியாத நிலையில் உள்ளார்.



# மல்யுத்தப் போட்டியில் மட்டக்களப்பு முதலாமிடம்


(காந்தன்)


**வ**டக்கு கிழக்கு மாகாணங்களுக்கிடையிலான மல்யுத்தப் போட்டி அண்மையில் மட்/சிவானந்தா தேசிய பாடசாலையின் மண்டபத்தில் நடைபெற்றது.இதில் ஒவ்வொரு நிறையிலிருந்தும் ஒவ்வொரு மாவட்டத்திற்காகவும் 10 பேர் கலந்து கொண்டனர். இதில் 8 பேர் முதலாமிடத்தினையும் பெற்று 2 பேர் மட்டுமே 2ம் இடத்தையும் பெற்று மட்டக்களப்பு சம்பியனானது. வெற்றியீட்டியவர்களின் பெயர் விபரம் பின்வருமாறு.

| | | |
|---|---|---|
| 1. ந.கோவேந்திரன் | 43-46 கி.கி | முதலாமிடம் |
| 2. வே.திருச்செல்வம் | 46-50 கி.கி | முதலாமிடம் |
| 3. ந.பிரதீபன் | 50-54 கி.கி | இரண்டாமிடம் |
| 4. வ.ரவீந்திரன் | 54-58 கிகி | முதலாமிடம் |
| 5. சி.பார்த்திபன் | 58-63 கி.கி | முதலாமிடம் |
| 6. வா.ஜெயதேவா | 63-69 கி.கி | இரண்டாமிடம் |
| 7. இ.பார்த்திபன் | 69-76 கி.கி | முதலாமிடம் |
| 8. பா.சுபாகரன் | 76-85 கி.கி | முதலாமிடம் |
| 9. க.தவக்குமார் | 87-97 கி.கி | முதலாமிடம் |
| 10. வே.விக்னராஜா | 97-130 கி.கி | முதலாமிடம் |

மேற்குறிப்பிட்ட எட்டுப் போட்டிகளில் முதலாமிடத்தைப் பெற்று சம்பியனானதோடு தொடர்ந்து 5 வருடமாக மல்யுத்தப் போட்டியில் சம்பியனாகத் திகழ்கிறது.







**மட்/மகாஜனக் கல்லூரியின் வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டியின் ஆரம்ப நிகழ்வாக ஒலிம்பிக் தீபம் ஏற்றும் போது எடுத்த காட்சியும், அணிவகுப்பின்போது எடுத்த காட்சிகளையும் இங்கே காணலாம்.**

**(படமும் தகவலும் காந்தன்)**

# வாசகர் நெஞ்சம்

## கசிப்பு ஒழிப்புக்கான அரங்கச் செயற்பாடு

**பா**வற்குளம் பகுதியில் கசிப்பு ஒழிப்புக்கான அரங்கச் செயற்பாடு அரங்கச் செயற்பாட்டுக்குழுவும் அதன் நெறிப்படுத்திலில் இயங்கராவூர் தாலிக்குளம் பூவரசன்குளம் பகுதியிலான இணைந்த கிராமிய அரங்கக் குழுவும், இணைந்து தமது கிராம மக்களின் கசிப்பு (வடிசாராயம்) ஒழிப்புக்கான நடவடிக்கையில் ஈடுபட்டுப்பெருமளவு வெற்றியையும் ஈட்டி வந்துள்ளது.

இதனைக் கேள்வியுற்ற பாவற்குளம் மக்கள் பல் கடிதம் மூலமும், நேரடியாகவும் தொடர்பு கொண்டு கிராமிய பண்பாட்டு அரங்கக் குழுவையும் தமது கிராமத்துக்கு வரும் படி வேண்டிக்கொண்டுள்ளனர். அப்பகுதி சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களும் இந்த முயற்சியில் முனைப்புடன் உள்ளனர்.

கசிப்பு ஒழிப்புக்கான அரங்கப் பயிற்சிப் பட்டறையினை 26.05.2001, 27.05.2001 சனி ஞாயிற்றுக் கிழமைகளில் அரங்கச் செயற்பாட்டுக்குழு பாவற்குளம் பகுதியில் நடாத்தியுள்ளது.

பட்டறை மூலம் தயார்செய்யப்படும் உணர்வுபூர்வமான அரங்காற்று கையோடு எதிர்வரும் 31.05.2001 வியாழக்கிழமை முழு நாளும் இக்கிராமத்தில் செயற்படவுள்ளனர். இதில் ஏராளமான மாணவர்கள். இளைஞர்கள், யுவதிகள் தாய்மார், தந்தைமார் முதியவர்கள் கலந்து கொள்வார்கள் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த நடவடிக்கையில் தொடர்ந்து ஈடுபடுவதற்கான அனுசரணையை வழங்க யுனிசெப் நிறுவனம் கொள்கையளவில் ஒப்புக கொண்டுள்ளது.

31.05.2001 நடைபெறப்போகும் அரங்காற்றுகையின் போது லண்டன் மென் செய்ஸர் **(University of Manchester -U.K)** பல்கலைக்கழக பிரயோக அரங்கத்துறை விரிவுரையாளர் பிரபல நாடக வியலாளர் ஜேம்ஸ் தொம்சன் கலந்து கொள்ளவுள்ளார்.

**எஸ். விந்தன்**
**வவுனியா**

## மட்/ப.நோ.கூ.சங்க பொது முகாமையாளர்

**ம**ட்டக்களப்பு ப.நோ.கூ.சங்கத்தின் தற்காலிக பதில் பொது முகாமையாளராக திருமதி.க.வேலுப்பிள்ளை இயக்குனர் சபை தீர்மானத் திற்கமைய நியமனம் பெற்று பொறுப்புக்களை பாரம் எடுத்துள்ளார்.

பொது முகாமையாளர் எஸ்.சுந்தரலிங்கம் இடைநிறுத்தம் சம்மந்தமான வழக்கு மட்டக்களப்பு மேல் நீதிமன்றத்தில் நடைபெறுகின்றது என்பதை குறிப்பிட விரும்புகிறேன்.

**நா. அமிர்தநாயகம்**
**பொதுச்சபை உறுப்பினர்**
**மட்/ப.நோ.கூ. சங்கம்**

## பிரதான வீதியைக் கவனிப்பார் இல்லையா?

**வெ**ல்லாவெளி பாலையடி வட்டை பிரதான வீதியைக் கவனிப்பார் இல்லையா? இப்பிரதான வீதியானது கடந்த பத்து வருடங்களுக்கு மேலாக கவனிப்பார் யாருமின்றி கிடக்கிறது. இவ்வீதியை திருத்துமாறு பலமுறை சம்மந்தப்பட்டவர்களிடம் கேட்டும் எதுவித பயனும் கிடைக்கவில்லை. தற்போது இவ்வீதியில் பள்ளமும் கிடங்குமாக போக்குவரத்துக்கு உதவாத நிலையில் உள்ளது. இவ்வீதியில் வாகனப் போக்குவரத்து அதிகமாக உள்ளதால் இனிவரும் காலங்களில் போக்குவரத்து செய்ய கடும் சிரமப்படும் துர்ப்பாக்கிய நிலை ஏற்படும் என்பதில் ஐயமில்லை. எனவே இப்பிரதான வீதியை திருத்தித் தருமாறு சம்மந்தப்பட்ட அதிகாரிகளிடம் மிகப் பணிவாக கிராம மக்கள் சார்பாக கேண்டுக்கொள்கிறேன்.

**அருச்சுணன் - தயாபரன்**
**பாலையடிவட்டை**

## வீதிகளின் ஓட்டை விழிக்குத் தெரியவில்லையா?

**கு**றுமண்வெளியின் நுழைவாயில் பிரதான வீதியிலே ஆங்காங்கே சில ஓட்டைகள் காணப்படுகின்றன. சென்ற முறை வீதி அபிவிருத்தி வேலைகள் நடைபெற்றபோதும் இவ்வீதிக்கு ஒழுங்காகத் தார் ஊற்றப்படவில்லை. என்பதும் குறிப்பிடத்தக்கது. மேலும் குறுமண் வெளியில் இருந்து மகிழூர் செல்கின்ற வீதியும் இதே நிலைக்குள்ளாக்கப்பட்டு வீதி நிலை குலைந்து காணப்படுகிறது.

நியூ ஹிமாலயா, ஓரியன்ற் போன்ற இரு கல்வி நிலையங்களுக்கும் தினமும் துவிச்சக்கர வண்டியில் வருகிற மாணவ மாணவிகள் மற்றும் பொதுஜனங்கள் யாவரும் நாளாந்தம் பல அசௌகரியங்களை எதிர்நோக்க வேண்டியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. இதே போன்று இன்னும் எத்தனையோ வீதிகள் நாளாந்தம் மோசமான நிலைக்குள்ளாக்கப்பட்டு வருகிறது. எனவே சம்மந்தப்பட்ட அதிகாரிகள் இதனை அலட்சியம் செய்யாமல் வீதிகளைப் புனரமைப்புச் செய்ய சீக்கிரம் நடவடிக்கை எடுக்க வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறோம்.

**இளையதம்பி திருச்செல்வம்**
**குறுமண்வெளி - 12**

# இலங்கை நிலைமை குறித்து

## ரணில் இந்தியத் தலைவர்களுடன் பேச்சுவார்த்தை

(டில்லி)

**இந்தியாவுக்கு ஆறு நாள் விஜயத்தை மேற்கொண்டு சென்றுள்ள எதிர் கட்சித்தலைவர் ரணில் விக்கிரமசிங்கா நேற்று இந்தியாவின் முன்னாள் பிரதமர் இந்திரகுமார் குஜராலைச் சந்தித்து பேச்சுக்கள் நடத்தியதாகத் தெரிவிக்கப்படுகிறது.**

இலங்கை இனப்பிரச்சினை தொடர்பாகவும் நோர்வே அரசு மேற்கொண்டு வரும் சமாதான முயற்சிகள் தற்போது தோன்றியுள்ள பின்னடைவு குறித்தும் ரணில் விக்கிரமசிங்க கலந்தாலோசனை நடத்தியதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை இந்தியப் பிரதமர் வாஜ்பாயை சந்தித்து பேச்சு நடத்தவுள்ளதாகவும் ஐ.தே.க. வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

## குடாநாட்டுப் படையினரை மீட்க "ஜல்லிகார்"

(யாழ் நிருபர்)

யாழ்குடாநாடு கடந்த வருடம் விடுதலைப்புலிகளின் முற்றுகைக்குள்ளான சமயம் இலங்கைப் படையினரை மீட்பதற் காக இந்திய அரசு ''ஜல்லிகார்'' ராணுவ நடவடிக்கையை மேற்கொள்ளத் தயார் நிலையில் இருந்ததாக இந்தியப் பாதுகாப்பு அமைச்சினால் வெளியிடப்பட்ட 2001ஆம் ஆண்டுக்கான அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தென்மராட்சியில் மக்களை குடியேற வேண்டாம் என புலிகள் அறிவிப்பு

(யாழ் நிருபர்)

தென்மராட்சிப் பகுதியில் மக்களைக் குடியேற்ற எடுக்கும் நடவடிக்கையை புறக்கணிக்குமாறும் விடுதலைப்புலிகளின் அறிவிப்புக் கிடைக்கும் வரை அப்பகுதிக்கு சென்று குடியேற வேண்டாம் எனவும் விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர்.

இது தொடர்பாக விடுதலைப்புலிகள் உத்தியோக பூர்வமாக விடுத்துள்ள அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளதாவது யாழ்குடா நாடு எதிரியின் வசமான திலிருந்து எத்தனையோ துன்ப துயரங்களை சுமந்து வரும் மக்களை மனிதக் கேடயமாகப் பயன்படுத்துவதில் எதிரியும், எதிரியின் அடிவருடிகளும் மாறி மாறி முயன்று வருகின்றனர்.

சென்ற ஆண்டு யாழ் குடாநாட்டில் வெடித்த போரின் போது பளைப் பகுதியிலும் ஏனைய பகுதியிலும் மக்களைக் கவசமாகப் பயன்படுத்தி போரிட முனைந்தனர்.

ஆனாலும் எமது துல்லியமான திட்டமிடலினால் எமது அறிவிப்புக்கு இணங்க மக்கள் இடம்பெயர்ந்து ஒத்துழைப்பு தந்ததினால் இழப்புக்கள் குறைக்கப்பட்டது.

ஆனால் தற்போது இன்னுமோர் போர் பிரதேசமாகக் காட்சி தரும் தென்மராட்சிப் பகுதிக்கு மக்களைக் குடியேற்ற அனைத்து தரப்பினரும் மும்முரமாக ஈடுபட்டு வருகின்றனர்.

மீண்டும் ஒருமுறை போர் அனர்த்தத்தினாலும் அழிவுகளினாலும் மக்கள் அவலப்படுவதை தவிர்க்கும் நோக்குடனேயே எமது உத்தியோகபூர்வ அறிவிப்பு கிடைக்கும் வரை குடியேற வேண்டாம் என்பதை தெரிவிக்க விரும்புகிறோம் என அந்த துண்டுப் பிரசுரத்தில் தெரிவித்துள்ளனர்.

## தமிழ்மொழியிலே கணினிப் பயிற்சி

(நமது நிருபர்)

அரச சேவையாளர்களுக்கான பயிற்சிகள் கொழும்பில் சிங்கள மொழியிலேயே நடத்தப்படுகின்றன. ஆயினும் வடக்கு கிழக்கு மாகாண மட்டத்தில் நடத்தப்படுகின்ற பயிற்சிகள் தமிழ் மொழிமூலம் நடத்தப்படுவதால், அரச ஊழியர்கள் இலகுவாகப் பயிற்சிகளில் கலந்து கொண்டு நன்மைபெறக்கூடியதாக இருக்கின்றது என்று வடக்குக் கிழக்கு மாகாண முகாமைத்துவ அபிவிருத்திப் பயிற்சித் திணைக்களத்தின் பணிப்பாளரும், பிரதிச் செயலாளருமாகிய வி.செ.சுவாமிநாதன் தெரிவித்தார்.

வவுனியாவில் நடைபெற்ற அரச ஊழியர்களுக்கான கணனி பயிற்சி நெறியில் பங்குபற்றியவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் வைபவத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

வவுனியா குருமண்காட்டில் உள்ள கே.ரி.பி.எம் கணினி நிலையத்தில் நடைபெற்ற 2001 ஆம் ஆண்டிற்கான கணினி பயிற்சி நெறியில் கலந்துகொண்ட 20 அரச ஊழியர்களுக்கான சான்றிதழ்கள் வைபவரீதியாக வழங்கப்பட்டன.

அங்கு உரையாற்றிய அவர் மேலும் தெரிவித்ததாவது: மேற்கத்தைய நாடுகளின் அபிவிருத்திச் செயற்பாடுகளின் போக்கில் விரும்பியோ விரும்பாமலோ அபிவிருத்தி அடைந்து வருகின்ற மூன்றாம் உலக நாடுகள் இழுபட்டுச் செல்ல வேண்டியேற்பட்டுள்ளது. வளர்முக நாடுகளின் தொழில்நுட்ப வளர்ச்சிப் போக்கின் அடியொட்டி இலங்கையிலும் கணனி பாவனை அலுவலகங்களில் அதிகரித்துள்ளன. இவற்றைப் பயன்படுத்துவதற்குரிய பயிற்சியை அரச ஊழியர்கள் பெறவேண்டிய தேவை எழுந்துள்ளது.

,,,மக்களின் தேவைகளை விரைவாகவும், திறமையாகவும் அரச ஊழியர்கள் வழங்க வேண்டும் என்பதற்காகவே இத்தகைய பயிற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. இந்த நோக்கத்தை உணர்ந்து இப்பயிற்சியில் மாகாண, மத்திய நிர்வாகத்தின் கீழ் பணியாற்றுகின்ற அரச ஊழியர்கள் கலந்து கொண்டு நன்மையடைவதுடன், மக்களுக்கு நன்மைகள் கிடைக்கத்தக்க வகையில் பணியாற்ற வேண்டும் என கேட்டுக் கொண்டார்.

## வெளிநாடு செல்ல முயன்ற 17 பேர் நீர்கொழும்பில் கைது

(நீர்கொழும்பு)

நீர்கொழும்பிலிருந்து இத்தாலிக்கு படகுஒன்றில் செல்ல முயன்ற பதினேழு பேர் நீர்கொழும்பு பொலிசாரினால் நேற்று காலை கைது செய்யப்பட்டுள்ளனர்.

போலி முகவர்களிடம் பெரும் தொகையான பணத்தை கொடுத்ததைத் தொடர்ந்து இவர்கள் நீர்கொழும்பிலிருந்து இத்தாலிக்கு செல்வதற்கான ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டதாக நாரஹன்பிட்டி பொலிசார் தெரிவித்துள்ளனர்.

## கோமரங்......

ுள்ளனர்.

அதன் பின்னர் அங்கு விரைந்த படையினர் அப்பகுதியை சுற்றி வளைத்துத் தேடுதல் நடத்தினர்.

இத்தேடுதலின் போது படையினர் மீது விடுதலைப்புலிகள் மேற்கொண்ட தாக்குதலில் இரு படையினர் பலியானதாக தெரிவிக்கப்படுகிறது.

## தமிழர்களின் சட்ட ரீதியான உரிமைகளை அரசு உறுதிப்படுத்தும்

(கொழும்பு நிருபர்)

புலிகள் அண்மையில் விதித்துள்ள நிபந்தனைகள் பரஸ்பர புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட முடியாத நிலையை ஏற்படுத்தியுள்ளது என ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியின் இந்தக் கருத்து அரசு - புலிகளுக்கு இடையிலான பேச்சுவார்த்தைகள் பின்னோக்கிச் செல்வதாக இராஜதந்திர வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

சமாதானப் பேச்சுக்களில் புலிகள் பங்கு பற்றினாலும் பங்கு பற்றாவிட்டாலும் அரசாங்கம் தமிழ் மக்களின் சட்ட ரீதியான உரிமைகளை உறுதிப்படுத்தும் வகையில் செயற்படும். இந்த வழிமுறைகளை சாத்தியமாக்குவதற்காக அரசியல் யாப்பினை மாற்றவும் நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று ஜனாதிபதி சந்திரிகா பண்டார நாயகா குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

உலக நோக்கு, சர்வதேச அமைப்பு ஏற்பாடு செய்துள்ள ஊடகமும், ஜனநாயகமும் என்னும் கருத்தரங்கில் பங்குபற்றுவதற்காக கொழும்பு வந்துள்ள 34 நாடுகளைச் சேர்ந்த பிரதிநிதிகள் கடந்த வியாழக்கிழமை மாலை ஜனாதிபதியைச் சந்தித்துக் கலந்துரையாடிய போதே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்

## மட்டு..........

கல்குடா, பட்டிருப்பு வலயக் கல்விப் பணிப்பாளர்கள் அன்றைய தினத்தை விசேட விடுமுறை தினமாகப் பிரகடனப்படுத்தியிருந்தனர். அத்தினத்துக்கான பதில் பாடசாலையே இன்று நடைபெறுகின்றமை குறிப்பிடத்தக்கது.

## வயதெல்லையை

பிக்கலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. ஆனால், வடக்கு கிழக்கில் நிலவும் தற்போதைய சூழ்நிலைகளில் 30 வயதுக்குள் பட்டப்படிப்பை பூர்த்தி செய்ய முடியாத நிலைமை உள்ளதால் இவ்வயதெல்லையை 35 ஆக உயர்த்துமாறு கலாசார உத்தியோகத்தர் சங்கம் கோரியுள்ளது.

இது தொடர்பாக கலாசார உத்தியோகத்தர் சங்கத்தின் தலைவர் த.மலர்ச்செல்வன் வடக்குப் புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் தமிழர் விவகார,இந்து கலாசார அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுக்கு மகஜரொன்றை அனுப்பி வைத்துள்ளார்.

## குழந்தை பிரசவத்தில் இளந்தாய் மரணம்.

(க.ஜெகதீஸ்வரன்)

இளம் கர்ப்பிணித்தாய் ஒருவர் நேற்றுக்காலை இறந்த சிசு ஒன்றை பிரசவித்த சிறிது நேரத்தில் தானும் மரணமடைந்த பரிதாப சம்பவம் ஒன்று நேற்று மட்டக்களப்பு அரச போதனா வைத்திய சாலையில் நிகழ்ந்துள்ளது.

கொக்கட்டிச்சோலையைச் சேர்ந்த சிவஞானம் பரமேஸ்வரி என்னும் மேற்படி பெண் இறுதியாக வைத்தியசாலையில் சேர்க்கப்படும் வரை எவ்விதமான வைத்தியஆலோசனையையும் பெறவில்லை எனத் தெரிய வந்துள்ளது. அத்துடன் குறித்த இளம் பெண்ணின் தாயாரால் பாரம்பரிய கிராமிய மருத்துவ முறைகளின் படி சிகிச்சை அளிக்கப்பட்டதாலேயே வயிற்றினுள்ளேயே சிசு இறந்ததுடன் தாயும் இறக்க வேண்டிய நிலை ஏற்பட்டதாக வைத்திய சாலை வட்டாரங்கள் கவலை தெரிவித்தன.

## பட்டதாரிகள்..........

ஒன்றியம் கவன ஈர்ப்புப் போராட்டமொன்றை அண்மையில் நடாத்தியது.இதன் முடிவில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுக்கு மகஜரொன்று கையளிக்கப்பட்டது. இந்நிகழ்வின் போது அமைச்சர் விடுத்த வேண்டுகோளையடுத்தே பட்டதாரிகளின் பெயர் விபரங்கள் அடங்கிய பட்டியல் கையளிக்கப்பட்டதாக ஒன்றியத் தலைவர் என். ரமேஸ்வரன் தெரிவித்தார்.

## பிரதியமைச்சர்.....

சோதனையிட்ட போது, சந்தேக நபரின் இடுப்பிற்குப் பின்னால் கைக்குண்டு ஒன்று மறைத்து வைக்கப்பட்டிருந்ததாம்.

இவ்வாறு குண்டுடன் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட நபர் சீனித்தம்பி இப்றாகீம் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

இவர் ஊர்க்காவல் படையிலிருந்து விலகிச் சென்ற ஒருவர் என்பது விசாரணைகளிலிருந்து தெரிய வந்துள்ளது.

மேலதிக விசாரணைகளை சம்மாந்துறை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர் என பிரதம இன்ஸ்பெக்டர் மெரில் திஸாநாயக்க தெரிவித்தார்.

## பட்டப்பகலில் .........

கோஷ்டி தங்களைப் பாதுகாப்புச் சேவையைச் சேர்ந்தவர்களென்று அறிமுகப்படுத்தி உட்சென்றிருக்கிறது. வீட்டிலிருந்தவர்களைப் பலவந்தப்படுத்தி ஒரு அறைக்குள் இழுத்துச் சென்றிருக்கின்றனர். 40 லட்சம் ரூபாய் வர்த்தகரின் படுக்கையின் கீழ் இரும்புப் பெட்டிக்குள் வைக்கப்பட்டிருந்ததால் கொள்ளையர்களிடம் அகப்படவில்லை.

கடையிலிருந்து நண்பகலில் வீட்டுக்குள் வர்த்தகரின் ஒரு மகன்தான் கட்டிவைக்கப்பட்டிருந்தவர்களை விடுவித்தார். அறையில் அலுமாரியில் அடுக்கி வைக்கப்பட்டிருந்த இருபது லட்சம் ரூபாய் பெறுமதியான சிகரட்டுப் பெட்டிகளை கொள்ளையர் தொட்டுக்கூடப் பார்க்கவில்லையாம்.

## ஆறாயிரத்துக்கு மேற்பட்ட மாணவர்கள் கண்காட்சியை கண்டுகளிப்பு!

(நமது நிருபர்)

வந்தாறுமூலை ஸ்ரீ-மஹா விஷ்ணு வித்தியாலயத்தில் நேற்று இரண்டாவது நாளாகவும் கல்விக் கண்காட்சி இடம்பெற்றது. இதனைப் பார்வையிட பல ஆயிரக் கணக்கான மாணவர்கள் வருகை தந் தனர்.

மட்டக்களப்பு, கல்குடா பட்டிருப்பு கல்வி வலயங்களைச் சேர்ந்த பாடசாலை மாணவர்கள் இக்கண்காட்சியைப் பார்வையிட்டனர்.

நேற்றைய கண்காட்சிக்கு பிரதம அதிதியாக கல்விக் கல்லூரி பீடாதிபதி என்.நடராசா கலந்து சிறப்பித்தார்.

மற்றும் ஏறாவூர்ப்பற்று பிரதேச செயலாளர் தி.கே.மகேசன் கிழக்குப் பல்கலைக்கழக பதிவாளர் ஏ.டி.ஹரிஸ், கல்விக்கல்லூரி பீடாதிபதி எஸ்.பாக்கியராசா உட்பட பலர் கலந்து கொண்டனர்.

இன்று இக்கண்காட்சியினை பொதுமக்கள் பார்வையிட முடியும்.

## ஆங்கில தினப்போட்டி இன்று ஆரம்பம்.

(தவம்)

மட்டக்களப்பு கல்வி வலய ஆங்கில தினப்போட்டிகள் இன்று சனிக்கிழமை ஆரம்பமாகின்றன. முதல் நாள் போட்டிகள் மட்டக்களப்பு புனித மிக்கேல் தேசிய பாடசாலையில் நடைபெறும். இதனையொட்டி இப்பாடசாலைக்கு இன்று விசேட விடுமுறை வழங்கப்பட்டுள்ளது. இன்று சொல்வதெழுதுதல், பிரதிபண்ணுதல் ஆகிய போட்டிகள் நடைபெறும்.

ஏனைய போட்டிகள் திங்கள் முதல் மூன்று தினங்களுக்கு, மட்டக்களப்பு இந்துக் கல்லூரி, மெதடிஸ்த மத்திய கல்லூரி ஆகிய பாடசாலைகளில் நடைபெறும்.

## மூன்று......

புலனாய்வுப் பொலிஸ் பிரிவு குற்றப் புலனாய்வுப் பிரிவு என்பன இணைந்து பொலிசாரின் விசேட அலுவலகத்தில் செயற்பட்டு வருகின்றன. வாரத்தில் வியாழன் வெள்ளி ஆகிய இரு தினங்கள் மாத்திரமே இந்த வழக்கு விசாரணை மேற்கொள்ளப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இப்பத்திரிகை வேல்ட் வொயிஸ் பப்ளிகேஷன் நிறுவனத்தினால் ஈஸ்ரன் கிராபிக்ஸ் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.